விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 15 சனிக்கிழமை (28.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 099




# மக்களை வெளியேற்றிவிட்டு படையினருடன் சண்டையிடுங்கள்



## புலிகளுக்கு ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் உள்ள மக்களை வெளியேற்றிவிட்டு பாதுகாப்புத் தரப்பினரை எதிர்கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளுக்கு அறிவித்துள்ளார். வடக்கின் நிலைமை தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ்க் கட்சிகளுடனான கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## பாக்.கில் தாக்குதல் ஐம்பது பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் பழங்குடியினர் வாழும் பகுதியிலுள்ள மசூதியொன்றில் நேற்று பிரார்த்தனை நடந்து கொண்டிருந்த வேளையில் தற்கொலைப் படை தீவிரவாதிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் பொதுமக்கள் 50 பேர் பலியாகினர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இத் தாக்குதலில் மசூதி முழுவதும் பலத்த சேதமடைந்தது. இதனால் அந்தப் பகுதியே பெரும் போர்க்களமாக காட்சியளித்தது. இத்தாக்குதலுக்கு இதுவரை எந்தத் தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்கவில்லை. (ச-5)

## கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 61 பேர் நேற்றைய எறிகணைத் தாக்குதலில் பலி

### புதுமாத்தளன் வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

வன்னியில் நேற்று நடத்திய எறிகணைத் தாக்குதல்களில் கர்ப்பிணிப் பெண்கள், சிசு உட்பட 61 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 164 பேர் படுகாயமடைந்துள்ளனர் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

மாத்தளன் கப்பல் வீதி, அம்பலவன்பொக்கணை, இடைக்காடு, வலைஞர்மடம் மற்றும் முள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகளில் நேற்று வெள்ளிக்கிழமை ஆட்லெறி எறிகணை பல்குழல் (12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் கடும் மோதல்

(கொழும்பு)

முல்லைத்தீவில் விடுதலைப் புலிகள் வசம் எஞ்சியிருக்கும் பிரதேசங்களை மீட்கும் நடவடிக்கையின் பொருட்டு அப்பிரதேசங்களில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் குறைந்தது 29 பேர் வரை (12ஆம் பக்கம் பார்க்க)

## சி.சு.க. அலுவலகம் மீது அம்பாறையில் தாக்குதல்

(அம்பாறை)

அம்பாறையில் அன்னமலைப் பகுதியில் அமைந்திருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகம் மீது நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

அன்று இரவு 8.30 மணியளவில் அடையாளம் தெரியாத ஆயுதக் குழு ஒன்று இப்பகுதிக்கு வந்து குறிப்பிட்ட கட்சியின் அலுவலகத் (12ஆம் பக்கம் பார்க்க)

## கம்பஹாவில் தேடுதல் 301 பேர் கைது

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்தின் பல பகுதிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலில் தமிழர்கள் உட்பட 301 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 6 மணிமுதல் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை (12ஆம் பக்கம் பார்க்க)

## மனிதாபிமானப் போர் நிறுத்தம் ஐ.நா., அமெ., பிரி. வலியுறுத்தல்

(நியூயோர்க்)

இலங்கையில் ஒரு மனிதாபிமான போர் நிறுத்தம் செய்துகொள்ளப்பட வேண்டும் என ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஆதரவுடன் ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

மோதலில் சிக்குண்டுள்ள மக்களின் நிலை குறித்து அது விடுதலைப் புலிகளைக் கடுமையாகக் குற்றஞ்சாட்டியுள்ளது.

உத்தியோகப்பற்றற்ற ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டமொன்றின் முடிவில் ஊடகவியலாளர்களிடம் பேசிய ஐ.நா.மனிதாபிமானப் பணிகளுக்கான தலைவர் ஜோன் ஹோம்ஸ், விடுதலைப்புலிகளால் அங்கிருந்து வெளியேற அனுமதிக்கப்படாமல் மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள பொதுமக்கள் குறித்தே தாம் பிரதானமாக அக்கறை கொள்வதாகத் தெரிவித்தார்.

இலங்கையின் மோதல்கள் நடைபெறும் வடபகுதிக்கு மனிதாபிமான பிரசன்னம் அனுமதிக்கப்பட (12ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளிடம் மேலும் ஒரு விமானம்?

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் மேலும் ஒரு இலகு ரக விமானம் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த மாதம் தற்கொலைப்படைத் தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட விமானத்தைப் போன்று மேலும் ஒரு விமானம் புலிகளிடம் உள்ளதாக இலங்கை இராணுவத்திற்கு தகவல் கிடைத்துள்ளதாக டெய்லி மிரர் பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது.

முல்லைத்தீவு பகுதியில் ஒரு குடிசைக்குள் மறைத்து வைக்கப்பட்டுள்ள இந்த விமானத்தை பொதுமக்கள் பலமுறை பார்த்துள்ளதாக கூறப்படுகிறது. (12ஆம் பக்கம் பார்க்க)



சிறுவர்களை மீட்போம்

சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்

unicef




சூரியன் அலைகளில் (யாழ்ப்பாணம் 93 Mhz)

சனிக்கிழமைகளில் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியினை நீங்கள் கேட்கலாம்

உங்கள் கதைகளை கேளுங்கள்

உள் நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களை தாங்கி வருகின்றது மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சி. இது உங்களுக்காக உங்கள் கதைகளை சொல்லும் ஒரு நிகழ்ச்சி

தொடர்புகளுக்கு மீண்டும் வாழ்வோம் த.பெ.இல 1039 கொழும்பு

# தென்னாசியாவில் "துணிச்சலான பெண்" நீதிபதி ஸ்ரீநிதிக்கு அமெரிக்க விருது



(கொழும்பு)

தென்னாசிய பிராந்தியத்தில் 'துணிச்சலான பெண்' என்ற அமெரிக்க இராஜாங்க அமைச்சின் விருது பம்பலப்பட்டி சிறுவர் நீதிமன்ற நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரனுக்கு வழங்கப் படவுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் றொபேர்ட் ஓபிளேக் இதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளார்.

தலைமைத்துவமும் துணிச்சலும் வெளிப் படுத்தும் பெண்களுக்கு அமெரிக்க இராஜாங்க அமைச்சு 'துணிச்சலான பெண்கள்' விருதினை வழங்கிவருகிறது.

அந்தவகையில் சட்டத்தரணியாகவும், நீதி வானாகவும் பணியாற்றிய காலகட்டத்தில் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சிறந்த தலைமைத் துவப் பண்பையும், துணிச்சலையும் வெளிப் படுத்தி வந்துள்ளார் என்று தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சகல இனப் பிரிவினருக் கும் நீதி வழங்குவதில் பாராட்டுக்குரிய விதமாகச் ஸ்ரீநிதி நந்தசேகரன் செயற்பட்டு வந்துள்ளார். அதுவும் நாட்டின் மிகக் கடினமான, மோதல்கள் நிகழும் பகுதிகளில் அவர் இந்தப் பணியினை செய்திருக்கிறார் எனவும் பிளேக் தெரிவித் துள்ளார்.

உலகம் முழுவதிலுமுள்ள அமெரிக்க தூதரங்கள் வருடம் தோறும் துணிச்சல் மிக்க பெண்கள் விருதைப் பெறுவதற்கான பெண்களைத் தெரிவு செய்கின்றன. இந்தவருடம் அமெரிக்கத் தூதரங்கள் உலகம் முழுவதுமுள்ள 80 பெண்களை தெரிவு செய்திருந்தன.

தென்னாசிய பிராந்தியத்துக்கான விருதுக்கு ஸ்ரீநிதி நந்தசேகரன் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

வாஷிங்டனில் இராஜாங்கத் திணைக் களத்தில் வழங்கப்படும் இவ் விருதுக்கு நைஜர், ரஷ்யா, யேமன், ஈராக், ஆப்கானிஸ் தான், கவுத்தமாலா, உஸ்பெகிஸ்தான் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து பெண்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஸ்ரீநீதி நந்தசேகரன் யாழ்.மேலதிக நீதிபதியாகவும் ஊர்காவற்றுறை நீதிபதியாகவும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## தலைக்கவசத்துக்குத் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் அணியும் தலைகவசத்துக்கு யாழ்ப்பாணத்தில் தட்டுப்பாடு நிலவுவதாக சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. இந்த தட்டுப்பாட்டை பயன்படுத்திய சில கடைகளில் தலைக்கவசம் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

அசாதாரண சூழ்நிலை காரணமாக மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் கடந்த மூன்று வருடங்களாக தலைக்கவசம் அணியாது பயணித்தனர்.

எனினும் அண்மைய நாட்களாக போக்குவரத்து சட்டவிதிகள் பொலிஸாரால் கடுமையாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

இதனையடுத்து தலைக்கவசம் இல்லாதவர்கள் அதனை கொள்வனவு செய்ய கடைகளுக்குச் சென்றாலும் அதனை பெற்றுக் கொள்ள முடியவில்லை எனக் கூறுகின்றனர். (எ)

## தெல்லிப்பழையில் அதிசய வாழைப்பொத்தி



தெல்லிப்பழை குளமங்கால் பகுதியில் உள்ள வீடொன்றில் வாழைக்குலைப் பொத்தி நிலத்தின் கீழ் இருந்து மேல் எழுந்து வளரும் அபூர்வமான சம்பவம் இடம் பெற்றுள்ளது. வீட்டின் பின்புறத்தில் வளர்க்கப்படும் வாழை குட்டி போட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து வாழையின் அடிமட்டத் தில் இருந்துசுமார் ஒரு அடிதூரத்தில்மற்று மொரு குட்டி வருவதைப் போன்று வாழை பொத்தி வெளி வந்துள்ளது. இந்த சம்பவம்குளமங்கால் முருகன் தேவதாஸ் என்பவரின் வீட்டிலேயே இவ் வாறுவாழைநிலத் தின்அடியிலிருந்து பொத்திவெளி வந்துள்ளதை படத்தில் காண்கிறீர்கள்.


### 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 01.11.1955 உதிர்வு 27.02.2009

அமரர் செல்லையா ஜெயானந்தம் (ஜெயம்)
((J.P) உப தலைவர், ஸ்ரீ சிவசிதம்ப ரேஸ்வரர் ஆலய பரிபாலன சபை)

கேணியூரின் நாயகனே!
எமை விட்டுச் சென்றதேனோ?
உள்ளம் குமைகிறது – அழகா!
நீ நின்றால் சபை சிறக்கும்
நீ நடக்கும் திசை வெளிக்கும் மன்னவனே!
உன் வாழ்வின் பொருள் உணர்ந்து
என்றும் உன்னை நினைத்திருப்போம்.
ஓம் சாந்தி!

ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர் ஆலய பரிபாலன சபையினர்.
சித்தன்கேணி. (C-2231)


## கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

(நல்லூர்)

சமூக அபிவிருத்தி மன்றத்தினால் மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கேக் ஐசிங் பயிற்சி வகுப்பில் பங்குபற்றிய மாணவிகளின் கேக் ஐசிங்கண்காட்சியும் அவர்களிற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இல.109 பருத்தித்துறை வீதி நல்லூரில் உள்ள சமூக அபிவிருத்தி மன்றக் காரியாலயத்தில் அதன் தலைவர் திருமதி ஜெ.ஜோசப் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் ஜே/ 106 இல் பணியாற்றும் கிராம சேவையாளர் திருமதி கிருஸ்ணகலா நாகேந்திரநாதன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். இந் நிகழ்வின்போது கலை நிகழ்சிகள் இடம்பெறுவதோடு மன்றத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டமும் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-14)

## மாணவர் கௌரவிப்பு

(வடமராட்சி)

நெல்லியடி கொமர்ஷல் வங்கியில் அருணலு கணக்கில் 5 ஆயிரம் ரூபாயிற்கு மேல் வைப்புச் செய்த, கடந்த வருடம் ஐந் தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நெல்லியடி முருகன் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ.செல்வரட்ணம் கலந்துகொள்கிறார். இதில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப் படவுள்ளனர். (ச-10)

## நலன்புரி நிலையங்களில் விசேட தபால் சேவை

(கொழும்பு)

விடுவிக்கப்படாத பிரதேசங்களிலிருந்து வருகை தந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் நலன் கருதி விசேட தபால் சேவை ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மக்கள் தங்கியுள்ள நிலையங்களுக்கு அதிகாரிகள் சென்று அவர்களுக்குத் தேவையான தபால் வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தபால்மா அதிபர் என்.கே.பி.திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய அந்த மக்களுக்கு அசௌகரியம் ஏற்படா வகையில் எதிர்காலத்தில் தபால் சேவையை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ச-3)

## வங்கிச் சேவை இன்று இடம் பெறும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி, யாழ். அதிமேற்தரக் கிளையின் வங்கிச் சேவை இன்று வழமை போன்று நடைபெறும் என பதில் பிரதான முகாமையாளர் அறிவித்துள்ளார். (ச)

## பட்டதாரி பயிலுநர்களுக்கான நேர்முகத் தேர்வு 30ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய போக்குவரத்துச்சபையின் கோண்டாவில் தலைமைக் காரியாலயத்திற்கு பட்டதாரி பயிலுநர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் என வட பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இப் பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, போக்குவரத்து அமைச்சு மற்றும் போக்குவரத்துச் சபையின் உயர் அதிகாரிகள் யாழ்ப்பாணம் வருகை தந்து இந் நேர்முகப்பரீட்சையை நடத்துவதுடன், வட பிராந்திய போக்குவரத்துச்சபையை முதலாம் தரத்துக்கு தரம் உயர்த்துவது தொடர்பாகவும் ஆராயவுள்ளனர். (ச)

## கண்காணிப்புக் குழுக் கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் எதிர்வரும் ஏப்பிரல் 03 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவிருந்த மாதாந்த மாவட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என யாழ்.சுகாதார சேவைகள் பதில் பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன் அறிவித்துள்ளார். (ச)

## கைக்குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

இணுவில் பகுதியிலுள்ள படையினரின் காவலரண் மீது நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 7.45 மணியளவில் கைக்குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இணுவில், காங்கேசன்துறை வீதியிலுள்ள மின் மாற்றி ஒன்றிற்கு அருகிலுள்ள படையினரின் காவலரண் மீது கைக்குண்டுகள் வீசப்பட்டதாகவும் கைக்குண்டு வெடித்தவுடன் படையினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றியோ அன்றி தாக்குதல் தொடர்பாகவோ படையினரிடமிருந்து உத்தியோக பூர்வமான தகவல் எதனையும் பெறமுடியவில்லை. (ச-5)

## சமுர்த்தி பயனாளிகளுக்கு ஒருவருட நிவாரண அட்டை

(கொழும்பு)

சமுர்த்தி பயனாளிகளுக்கு இந்த வருடம் முதல் ஒரு வருடத்திற்குரிய நிவாரண அட்டைகளை ஒரே தடவையில் விநியோகிப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி ஆணையாளர் நாயகம் சரத் விஜய வீர தெரிவித்துள்ளார்.

கடந்த வருடங்களில் சமுர்த்தி நிவாரண அட்டைகள் வருடத்திற்கு இரண்டு தடவைகள் விநியோகிக்கப்பட்டதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால்பயனாளிகளுக்குஏற்படும்அசௌகரியங்கள் மற்றும் நிர்வாகச் சிரமங்கள் என்பவற்றைக்கவனத்தில்கொண்டு இந்ததீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-3)


## தேவை

டீஸல் லொறி மெக்கானிக் ஓட்டுநர், கூலியாட்கள் தேவை.

தொடர்பு:
சிவலிங்கம் மோட்டோஸ்
77, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்,

(2452)

# இன்று ஒரு தகவல்

## உடல் மொழி

ஒருவர் யாருடனோ தொலைபேசியில் பேசிக் கொண்டிருக்கிறார்.

அவர் பேசிக்கொண்டிருப்பது என்ன என்பது நம் காதில் விழவில்லை. இருந்தாலும் அவர் பேசிக்கொண்டிருப்பது நல்ல செய்தியா கெட்ட செய்தியா என்பதை அவருடைய முகத்தைப் பார்த்தே நம்மால்`யூகிக்க முடிகிறது.

மகிழ்ச்சியான செய்திகளைப் பேசும்போது முகம் மலர்கிறது. புன்னகை பூக்கிறது. இதில் ஒரு விஷயத்தைக் கவனியுங்கள்.

நம்மிடம் பேசிக்கொண்டிருப்பவர் எதிரில் இல்லை. அவர் நம்முடைய குரலை மட்டும் தான் கேட்கப் போகிறார் நம்முடைய முகம் எப்படியிருக்கிறது என்பதை அவர் பார்க்கப் போவதில்லை. அப்படியிருந்தும் நம்முடைய முகம் ஏன் மலரவேண்டும்?

இதைத்தான் 'உடல்மொழி' என்கிறார்கள். நம்மையறியாமலே நம் உடம்பு செய்திகளைத் தெரிவிப்பது தான் உடல் மொழி.

ஒருவர் தொலைபேசியில் பேசுவதை நீங்கள் தூரத்திலிருந்து கவனித்துக் கொண்டே அவர் நண்பருடன் பேசுகிறாரா? மனைவியுடன் பேசுகிறாரா? குழந்தையுடன் பேசுகிறாரா? மேலதிகாரியிடம் பேசுகிறாரா? அவருக்குக் கீழே பணியாற்றுபவரிடம் பேசுகிறாரா? என்பதை கண்டு பிடிக்கலாம். காரணம் உடல்மொழி.

இதைப்பற்றியெல்லாம் சில நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

குறிப்பாக ஒருவர் அவருடைய நாற்காலியில் கிட்டத்தட்ட படுக்காத குறையாக உட்கார்ந்திருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்களேன். எதிரில் இருப்பவர் பேசுவது அவருக்குப் பிடிக்கவில்லை என்று அர்த்தமாம்.

தலையைச் சொறிந்து கொள்வது, வேறு வேறு திசையில் பார்ப்பது, கொட்டாவி விடுவது, கால்களை மாற்றிப் போட்டு உட்காருவது, களைப்பாக கைவிரல்களைப் பின்னிக் கொள்வது, அடிக்கடி க்டிகாரத்தைப் பார்ப்பது இவ்வாறெல்லாம் ஒருவர் செய்து கொண்டிருந்தால் நாம் சீக்கிரம் அந்த இடத்தை விட்டு எழுந்து வருவது நல்லது.

ஏனெனில் இதெல்லாம் அவருடைய சலிப்பு, சோர்வு, ஆர்வமின்மை என்பவற்றிற்கு அடையாளம். நம்முடைய பேச்சு அவரை சலிப்படைய வைத்து விட்டது என்று அர்த்தம்.

அதே நேரத்தில் நாற்காலியின் நுனியில் அமர்ந்து, உடலை முன்னுக்கு நகர்த்தி எதிரில் இருப்பவர் கண்களைப் பார்த்துக் கொண்டே பேசினாலும் சரி அல்லது பேச்சைக் கேட்டாலும் சரி உங்கள் பெயரில் மற்றவர்களுக்கு உள்ள பிடிப்பு அதிகரிக்கும்.

நாம் எப்படிப்பட்டவர் என்பதை நம் உடம்பும் நடையுடை பாவனையும் அடுத்தவர்களுக்கு காட்டிக் கொடுத்து விடும்.

உங்கள் உடம்பு, பார்வை, நடை, உட்காரும் விதம் இதை வைத்துக் கொண்டே நீங்கள் பொறுப்பானவரா, முரடரா, அலட்சியமானவரா, மரியாதை தெரிந்தவரா, அடக்கமானவரா, நம்பிக்கைக்குரியவரா, நாணயமில்லாதவரா, பயந்தவரா, திறமைசாலியா, அப்பாவியா என்பதை கண்டு பிடித்து விடலாமாம்.

அதனால் 'உடல் மொழி'யைப் புரிந்து கொண்டு நம்மைக் கொஞ்சம் சரிபண்ணிக் கொண்டால் வாழ்க்கையில் சுலபமாக பல காரியங்களை சாதித்து விடலாம்.

ஒரு மனநல மருத்துவமனையில் ஒருவர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு காரோட்டுவது மாதிரி பாவனை செய்து கொண்டிருந்தார்.

அதைப் பார்த்த ஒருவர் பக்கத்திலிருந்தவரிடம், "ஏன் இப்படிச் செய்கிறார்?" என்று கேட்டார்.

"இவருக்கு காரோட்ட வேண்டும் என்று ஆசை. அது நிறைவேறாமல் போனதால் இப்படிச் செய்கிறார்" என்றார் அவர்.

"நீங்கள் சொல்லக்கூடாதா... இப்ப நீங்க காரோட்டவில்லை. வெறும் நாற்காலியில் தான் உட்கார்ந்திருக்கிறீர்கள்" என்றார் இவர்.

இதற்கு அவர், "அது முடியாது. ஏனென்றால் அந்தக் காரைக் கழுவுவதற்காக அவர் தினமும் எனக்கு 10 ரூபா கொடுத்துக் கொண்டிருக்கிறாரே" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## பாதீனியத்தை அழிப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

கடந்த மாசி மாதத்தில் பெய்த மழையின் காரணமாக கோண்டாவில், திருநெல்வேலி, உரும்பிராய் பகுதிகளில் பாதீனியம் களை பரவல் அமைந்துள்ளது. கால் நடைகளுக்கு பல்வேறு பக்க விளைவுகளை ஏற்படுத்தும் இக்களையானது விவசாய பயிர்களின் விளைச்சலையும் குறைத்து விடும் தன்மை கொண்டது.

பாதீனியம் பற்றி பல தடவைகள் பொதுமக்களுக்கு கூறப்பட்டும் அது பற்றிய ஆர்வம் இன்மையால் பாதீனியத்தை முழுமையாக அழிக்கவோ அன்றி கட்டுப்படுத்தவோ முடியவில்லை என விவசாய திணைக்களத்தினர் கவலை தெரிவித்துள்ளனர். (ஓ-36)

## ஹன்டி பேரின்பநாயகம் நினைவு தினம்

சர்வதேசிய மார்க்கசிய குழுவினால் "வரலாற்றில் ஹன்டி பேரின்பநாயகம்" என்னும் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு 189, வேம்படி வீதி யாழ்ப்பாணத்தில் அகவிழி காரியாலயத்தில் A.C.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆரம்ப உரையை இலங்கை ஆசிரியர் சங்கம் தியாகலிங்கம் நிகழ்த்துவார் என சர்வதேச மார்க்கசிய குழு தெரிவித்துள்ளது. (ஓ-4)




## சட்ட விரோத மின் இணைப்புக்கள்


ஆசிரியர்,
வலம்புரி.

கதிரிப்பாய் முரசொலி வீதியில் மின் இணைப்பு வழங்கப்பட்ட பகுதிகளில் ஒரு பகுதியினர் திருட்டுத்தனமாக வீதிக்குக் குறுக்காக மின்கம்பிகள் புதைக்கப்பட்டு முழு நேரமும் மின்சாரம் பெறுகின்றனர்.

இன்னொரு பகுதியினர் மாலை 5.00 மணிக்குப் பின்னர் பாதுகாப்பற்ற மின்கம்பிகள் கொண்டு திருட்டு மின்சாரம் பெறுகின்றனர். இதனால் துவிச்சக்கர வண்டியில் செல்வோரும், நடந்து செல்பவர்களும் பல அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

இது தொடர்பாக பொறுப்பதிகாரி, பாவனையாளர் சேவை, இலங்கை மின்சார சபை, சுன்னாகம் என்ற முகவரிக்கு எழுத்து மூலம் இரண்டு தடவைகள் அறிவித்திருந்தோம். இதன் விளைவாக சென்ற வருடம் தீபாவளி அன்று இலங்கை மின்சார சபையினர் வீதிக்குக் குறுக்காகப் புதைக்கப்பட்ட மின்கம்பிகளை வெட்டி அகற்றி உதவி புரிந்தனர். எனினும், திருட்டுத்தனமாக மின் இணைப்புப் பெறும் நிகழ்வு நின்றபாடில்லை. எனவே இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் சார்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

கதிரிப்பாய் மக்கள்
(குறிப்பு : பிரஸ்தாப கடிதத்தில் 18 பேர் கையெழுத்திட்டுள்ளனர்)



பாடசாலை மட்டத்தில் ஊடகக்கல்வியினை அறிமுகப்படுத்தும் வகையில் "தரம் 10இற்கான ஊடகக்கல்வி நெறிப்படுத்தல்" எனும் விடயத்திலான கருத்தரங்கு அண்மையில் யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் ஆகியோர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட பாடசாலை ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- அலுவலக செய்தியாளர்)

## இராசி பலன்

28.03.2009
(பங்குனி 15, சனிக்கிழமை)
துதியை முன்னிரவு 8.23 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 5.32 மணிவரை
இராகுகாலம் 9.13 - 10.43 மணிவரை
சுபநேரம் 3.13 - 4.43 மணிவரை
இணுவில் சிவகாமி அம்மை, மாதகல் பாணாகவெட்டி அம்மை கொடியேற்றம்
செல்லப்பா சுவாமிகள் குருபூசை

| | |
|---|---|
| மேடம் | புதிய முயற்சி, கற்பனை மிகுதி, நண்பர்கள் உதவி, நிலை மாற்றம். |
| இடபம் | எடுத்த காரியம் தாமதமாகும், தொழில் நன்மை, சுபசெலவு, சயன சுகக்குறைவு. |
| மிதுனம் | கலந்துரையாடல், காரிய சித்தி, தனவருவாய், மனமகிழ்ச்சி. |
| கடகம் | சுபநிகழ்வு, தொழில் ஆர்வம், முயற்சி கைகூடும், பாராட்டு. |
| சிங்கம் | தந்தை வழி உறவு, ஆன்றோர் சந்திப்பு, கட்டுப்பாடு, தனவிரயம். |
| கன்னி | மனக்கவலை, தொழில் முடக்கம், வாகன பயம், போசன சுகம். |
| துலாம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, ஆரோக்கியம், போசன சுகம், பொருள் சேர்க்கை. |
| விருச்சிகம் | திடீர் பயணம், உற்சாகம், நல்ல செய்தி, தொழில் முன்னேற்றம். |
| தனுசு | வியாபார விருத்தி, உறவினர் சந்திப்பு, தனவிரயம், திடீர் நன்மை. |
| மகரம் | வேலையில் ஆர்வம், நண்பர்கள் சந்திப்பு, முயற்சி தாமதம், போசன சுகம். |
| கும்பம் | புதிய பொருள் சேர்க்கை, பிரயாண நன்மை, காரிய அனுகூலம், கீர்த்தி. |
| மீனம் | தொழில் சிந்தை, உறவினர் மனஸ்தாபம், முயற்சி தாமதம், தனவிரயம். |

வளவன்

## விக்கினேஸ்வரா கல்லூரி மாணவர்களின் வெற்றிகள்

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் மைக்ரோ சொப்ற் நிறுவனமும் இணைந்து பாடசாலை மாணவரிடையே நடத்திய கணனி மென்பொருள் தயாரிப்புப் போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி. எஸ். அமுதசுனித்தா மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன் அகில இலங்கை ரீதியில் 5ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை சாரணர் நினைவு தினத்தை கொண்டாடு முகமாக நடத்தப்பட்ட மாகாண மட்ட குருளைச் சாரணர் போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த குருளைச் சாரணர்கள் பொம்மலாட்டம், கோலாட்டம் ஆகிய இரு நிகழ்ச்சிகளிலும் முதலாம் இடத்தை பெற்றுள்ளதுடன் அகில இலங்கை ரீதியாக நுவரெலியாவில் நடைபெறவுள்ள மாகாண மட்ட குருளைச் சாரணர் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## பால் விற்பனை நிலையம் விரைவில் ஆரம்பம்

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினரால் பால் விற்பனை நிலையம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்மூலம் பண்ணையாளர்களும், பொது மக்களும் நன்மையடைய உள்ளனர் பால் உற்பத்தியாளர்கள் தமது பால் உற்பத்திகளை இங்கு விற்பனை செய்யலாம். பாற்பொருட்கள் தேவையான பொது மக்களும் இங்கு பெற்றுக் கொள்ளலாம். இந்நிலையத்துக்குத் தேவையான குளிரூட்டிகள், தளபாடங்கள் உபகரணங்களை 'நிக்கொட்' நிறுவனம் வழங்கியுள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர் தா. பாலசுந்தரம் தெரிவித்துள்ளார். (ஓ-29)





இலங்கை மின்சாரசபை யாழ்.நகரப் பணிமனையில் மின் அத்தியட்சகராகப் பணியாற்றிய ஏ.அருள்நாதன் சேவையில் இருந்து ஓய்வுபெறுவதை முன்னிட்டு மின்சாரசபை ஊழியர்களால் நடத்தப்பட்ட பிரியாவிடை வைபவத்தின் போது விழா நாயகனான அருள்நாதன் அவரது பாரியார் சகிதம் விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதையும், நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வடமாகாணப் பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தம் விழாநாயகனுக்கு தங்கச்சங்கிலி அணிவித்துக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

## மஹோற்சவம்

இணுவையம்பதி சிவகாமி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு மஞ்சமும், 6ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறமும், 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும், 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது என ஆதீனகர்த்தா மு.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (ஓ-4)

## கௌரவிப்பு நிகழ்வு

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் தரம் 10 முதல் 13 வரையான புலமைப் பரிசில் திட்டத்தில் இவ்வாண்டில் இணைத்துக்கொள்ளப் பெறும் மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அரியாலை அபிவிருத்திச் சங்கத்தில் சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ. இரவீந்திரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். புங்கன்குளம் அரியாலை ஸ்ரீ முருகன் நகை மாடம் முகாமையாளர் த.மணிவண்ணன் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-4)

# புத்தாண்டிற்கு முன் 60 மினி கோப் சிற்றிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் புத்தாண்டிற்கு முன்னர் 60 மினி கோப் சிற்றிகளை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு கூட்டுறவு சங்கங்களிலும் கோப் சிற்றிகளைத் திறப்பதற்கு மக்கள் வங்கி தலா 10 இலட்சம் ரூபாவை கடனாக வழங்கியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கிராமிய மக்களுக்கு சகல உணவுப் பொருட்களும் தரமானதாகவும் நியாயமான விலையில் கிடைப்பது உறுதி செய்வதுமே அரசாங்கத்தின் நோக்கம் ஆகும். இந்தக் கொள்கைக்கு அமைய ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிற்கும் 3 மினி கோப் சிற்றிகள் வீதம் கிராமங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. யாழ்.மாவட்டத்தில் 25 கோப் சிற்றிகள் ஏற்கனவே திறக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை வழங்கல்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை நகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை வழங்கப்பட்டு வருகின்றது.

நன்கொடையை இதுவரை பெற்றுக் கொள்ளாத சனசமூக நிலையங்கள் உரிய அறிக்கைகளைச் சமர்ப் பித்து உடனடியாக நகரசபைக்கு சமூகமளித்து நன்கொடையைப் பெற்றுக்கொள்ளுமாறு நகரசபை செயலாளர் கு.அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். (ஓ-10)

## 75 பயனாளிகளுக்கு கால்நடை வழங்கல்

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் தெரிவுசெய்யப்பட்ட 75 பயனாளிகளுக்கு "வேல்ட் விசன்" நிறுவனத்தினரால் கால்நடைகள் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இதற்குத் தேவையான கால்நடைகளை சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினர் கொள்வனவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இவற்றை விற்பனை செய்ய விரும்பும் பொதுமக்களைத் தொடர்புகொள்ளுமாறு சங்கப் பொது முகாமையாளர் தா.பாலசுந்தரம் அறிவித்துள்ளார். (ஓ-29)

## யாழ்.செய்திகள்

## காசநோய் பாதிப்பு அதிகரித்துள்ளது

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் கடந்த வருடத்தில் காசநோயினால் பெரும்பாலானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் தொடர்பு சுகாதாரப் பரிசோதகரினால் அண்மையில் நடைபெற்ற பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நெருப்புக்காய்ச்சல், மலேரியாக் காய்ச்சல் போன்ற நோயினால் பெருமளவுபாதிப்பு ஏற்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-35)

# நிஷா வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிணறுகள் துப்புரவாக்கல் பணி

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்கிலுள்ள மூன்று உள்ளூராட்சி சபைகளும் நிஷா வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிணறுகளை துப்புரவாக்கி வருகின்றன. இந்த வகையில் பருத்தித்துறை நகரசபையினால் 11 பொதுக் கோயில் கிணறுகளும் 65 தனியார் கிணறுகளும் நீரிறைக்கப்பட்டு துப்புரவாக்கப்பட்டுள்ளன. மேலும் 100 கிணறுகள் வரை துப்புரவாக்கப்பட்டுள்ளதாக நகரசபை செயலாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 18 பொதுக் கிணறுகளும் 40 தனியார் கிணறுகளும் நீரிறைக்கப்பட்டு துப்புரவாக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் கிணறுகள் துப்புரவாக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேசசபை செயலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வல்வெட்டித்துறை நகரசபையினால் 10பொதுக் கிணறுகள், 20 தனியார் கிணறுகள், தபாற்கந்தோர் கிணறு, 2 பாடசாலை கிணறுகளும் நீரிறைக்கப்பட்டு துப்புரவாக்கப்பட்டது.

இதனைவிட தற்போது சேவா லங்கா நிறுவனமும் கிணறுகள் நீரிறைத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டுவருவதாக நகரசபை செயலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கிணறுகளினை இறைத்து துப்புரவாக்க சுகாதாரத் திணைக்களத்தினால் குளோரின் வழங்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் சுகாதாரப் பரிசோதகரினால் அண்மையில் நடைபெற்ற வடமராட்சி வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ஓ-35)

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தின் வருடாந்த மஹோற்சவம்

(பொன்னாலை)

காரைநகர் ஈழத்து சிதம்பரம் சிவன்கோவில் வருடாந்த பங்குனி மஹோற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத்திரு விழாவும், 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பஞ்சரத பவனியும், 8 ஆம்திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 7 மணிக்கு கொடியிறக்கமும், மறுநாள் மாலை 4.30 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் நடைபெறவுள்ளது.

அத்துடன் இன்று சனிக்கிழமை பத்திர காளி பொங்கல் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ஓ-49)

# நடைமுறைக்கு வரும் பாரவூர்திக் கட்டணங்கள்

(கோண்டாவில்)

காங்கேசன்துறை, மயிலிட்டி ஆகிய துறைமுகங்களில் இருந்து 10 மெற்றிக் தொன்னுடன் 10 கிலோமீற்றர் தூரம் செல்லும் பார ஊர்திகளின் ஒரு வழிப் பயணத்தின் நிலையான கட்டணமாக 6 ஆயிரத்து 400 ரூபா அறவிடப்படவுள்ளது.


யாழ். அரசாங்க அதிபரினால் நியமிக்கப்பட்ட யாழ்.மாவட்ட விலை நிர்ணய உப குழுவின் சிபாரிசுக்கு அமைய இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந் நடைமுறை அமுலுக்கு வரும் வரையில் கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 10 கிலோமீற்றர் தூரத்திற்கு அதிகமாக 11 கிலோமீற்றர் - 40 கிலோமீற்றர் வரை 31 ரூபாவும், 41 கிலோமீற்றர் - 61 கிலோமீற்றர் வரை 36 ரூபாவும், 61கிலோமீற்றருக்கு மேலே 40 ரூபாவும் ஒரு வழி கட்டணமாக அறவிடப்படும். சென்று திரும்பும் தூரமும் இதனுள் உள்ளடக்கப்படும் என யாழ். மாவட்ட பார ஊர்திகள் சங்கப் பொதுமுகாமையாளர் எஸ். ரவிக்குமார் தெரிவித்துள்ளார். (ஓ-36)

## மகளிர் தின வைபவம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தான பாலசம்ரட்ஷணா சமூக நலனோம்பு மன்றத்தின் பெண்கள் மேம்பாட்டுத்துறை நடத்தும் மகளிர் தின வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் பாலசம்ரட்ஷணா பெண்கள் மேம்பாட்டுத் துறைத் தலைவர் திருமதி கலைவாணி விமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் தெற்கு கிராமசேவையாளர் திருமதி ராகினி இராமலிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக மன்ற இயக்குநர் சி.வி.கே.சிவஞானம் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-6)





உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திற்கு ஐ.ஓ.எம். நிறுவனம் வழங்கிய குடிநீர்த்தாங்கியை வித்தியாலய அதிபர் சி.மனோகரன் திறந்து வைப்பதையும், ஐ.ஓ.எம். நிறுவனப் பொறியியலாளர் மா.கிங்ஸ்லி சாந்தகுமார், அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 107

## ஹௌவரும் தமிழரும்

### உறுதிபெற்ற இனக்குழுக்கள்

### 900-1070

இக்காலத்தில் இலங்கையில் தென் மேற்கில், இன்றைய குருநாகல் மாவட்டத்தில், மாகல்ல என்ற இடத்தில் கட்டப்பட்ட ஒரு கோயிலாக விக்கிரமசலாமேக ஈஸ்வரம் என்ற கோயிலைப் பற்றி அறிய முடிகின்றது. இலங்கையில் ஆட்சி நடத்திய சோழ லங்கேஸ்வரர்களுள் ஒருவன் பெயரால் இது அமைக்கப்பட்டிருந்தது எனலாம்.

இக் கோயிலுக்கு முதலாம் குலோத்துங்க சோழனுடைய மகளாகிய சுத்தமல்லியாழ்வார் சில தானங்களை வழங்கியமை ஒரு கல்வெட்டால் வெளிப்படுகின்றது. பிற்காலத்தில் இக்கோயில் இருந்த இடத்தில் ஒரு பௌத்த நிறுவனம் அமைக்கப்பட்டது.

இவற்றைவிடப் பல சோழர் காலக் கோயில்களின் அழிபாடுகள் காணப்பட்டாலும் அவற்றின் பெயர்கள் பேணப்படவில்லை.

#### பௌத்த பள்ளிகள்

சைவக் கோயில்கள் போன்று, தமிழர்களுடைய பௌத்த பள்ளிகளுள் சோழ மன்னர் பெயர்களைப் பெற்றிருந்தன என்று கூறலாம். இப்பள்ளிகள் இன்று பெரும்பாலும் அழிந்து முற்றாக மறக்கப்பட்ட நிறுவனங்களாகி விட்டன.

ஆனால் இவை சோழர் ஆட்சியின்போது சிறப்புடன் காணப்பட்டன என்றே தோன்றுகிறது.

இவற்றுக்கு எடுத்துக்காட்டாக, திருகோணமலைக்கு அருகாமையில் பெரியகுளம் என்று முன்னர் பெயர் பெற்ற இடத்தில் காட்டில் மறைந்திருந்து வெளிப்படுத்தப்பட்ட ராஜராஜப் பெரும்பள்ளி என்ற தமிழ்ப் பௌத்த பள்ளியைக் குறிப்பிடலாம்.

பல நூற்றாண்டுகளாக அங்கு இருந்த பௌத்த பள்ளி, சோழர் காலத்தில் திருத்தி அமைக்கப்பட்டுப் பல தமிழ்ப் பௌத்தர்களின் ஆதரவைப் பெற்றிருந்தது. இன்னும் அதன் அழிபாடுகள் பரந்த ஒரு பிரதேசத்தில் இருப்பதால், அது ஒரு பெரிய நிறுவனமாக இருந்தது எனலாம்.

அதன் கட்டட அமைப்பு திராவிடக் கட்டட பாணியில் இருப்பதால் சோழர் காலத்தில் தமிழ்ச் சிற்பிகளும் கட்டடக் கலைஞர்களும் இதனைத் திருத்திப் பெருப்பித்து அமைக்க உதவியிருந்தனர் எனலாம்.

ஏறக்குறைய பதினைந்து தமிழ்க் கல்வெட்டுக்கள் இப் பள்ளிக்குத் தானங்கள் வழங்கியோரால் பொறிக்கப்பட்டு அங்கு கிடைத்துள்ளன.

கிழக்கிலங்கையில் இருந்த பிற தமிழ் பௌத்த பள்ளிகளுள் இன்னொன்று விக்கிரம சலாமேகப் பெரும்பள்ளி ஆகும். இது சோழ லங்கேஸ்வரன் என முன்னர் குறிப் பிடப்பட்ட விக்கிரம சலாமேகன் பெயரைக் கொண்டிருந்தது எனலாம்.

#### சோழர் நகரங்கள்

சோழர் ஆட்சியின் போது பல நகரங்கள் வர்த்தக நடவடிக்கைகளும் மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகளும் நடைபெற்ற மையங்களாக அங்கும் இங்கும் காணப்பட்டன என ஊகிக்கலாம்.

இவற்றுள் முக்கிய துறைகளாக விளங்கிய மாதோட்டமும் திருகோணமலையும் வளர்ச்சியுற்ற நகரங்களாக இருந்திருக்க முடியும். இவற்றில் அழிபாடுகள் இன்று இல்லை. எனினும் மாதோட்டம் பற்றிச் சிறிது அறிந்து கொள்ளக் கல்வெட்டுச் சான்றுண்டு. சோழர் ஆட்சி தொடங்கும்முன், பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, மாதோட்டம் ஒரு துறைமுகப் பட்டினமாக எழுச்சி பெற்றிருந்தது. சோழ ஆட்சியாளரும் அக்கால வர்த்தகர்களும் அதனை மேலும் முக்கியத்துவமடையச் செய்தனர்.

ராஜராஜன் பெயரால் மாதோட்ட நகரம் ராஜராஜபுரம் என்றழைக்கப்பட்டது. அங்கு இருந்த ஒரு பிரதான வீதி ராஜராஜப் பெருந்தெரு என்ற பெயரைப் பெற்றது. நகரம் கம்மாணச்சேரி போன்ற பல சேரிகளைக் கொண்டிருந்தது.

இந் நகரத்தில் பல செல்வந் தர்களுடைய மாளிகைகளும் வீடுகளும் தோட்டங்களும் இருந்தன என்று கூறலாம். அப்படியான செல்வந்தர்களுள் ஒருவனான குன்றன் காமன் என்பவனுடைய மாளிகை யும் வீடும் தோட்டமும் ராஜராஜப் பெருந் தெருவுக்குக் கிழக்கே காணப்பட்டது.

இந் நகரத்தில் பல்வகைப்பட்ட தொழில்களில் ஈடுபட்டோரும் வர்த்தகர்களும் இருந்தனர். அவர்களுள் கம்மாளர்,நெசவுத் தொழிலில் ஈடுபட்டுத் தறிகளைப் பயன்படுத்திய சாலியர், சங்கரப்பாடியார்,வெற்றிலை வாணியர் மற்றும் வாழைக்காய் வாணியர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சோழர் காலத்தில் மிகவும் பெரிய நகரமாகவும் உன்னத நிலையில் அமைந்த நகரமாகவும் இருந்த நகரம் அவர்கள் அதிகார மையமாகிய ஜனநாதபுரம் முன்னர் குறிப்பிட்டது போலப் புலைநரி எனத் தமிழில் வழங்கிய பொலநறுவை ஒரு பிராமணக் குடியிருப்பாக மாறியபோது, ஒரு சதுர்வேதி மங்கலமாகியது.

சோழர் ஆட்சி தொடங்கியபோது, ராஜராஜனுடைய பல பெயர்களுள் ஒன்றாகிய ஜனநாதன் என்ற பெயரால் ஜனநாத மங்கலம் என்றும், பின்னர் அதிகார மையமாக விளங்கியபோது ஜனநாதபுரம் என்றும் இது பெயர் பெற்றது.

இந் நகரத்தின் அழிபாடுகள் இன்றும் இருப்பதால், முறையான அகழ்வாய்வு மூலம் சோழர் ஆட்சியின் போது இருந்த நகரத்தை அறிந்துகொள்ள வாய்ப்புண்டு. அங்கு சோழர் ஆட்சியின் போது பல கோயில்கள் இருந்தன.

**பேராசிரியர்**
**கா. இந்திரபாலா**

பிற நகரங்களுள் குறிப்பிடத்தக்கது மண்டலகிரி என முன்னர் பெயர் பெற்று இப்பொழுது மதிரிகிரியா என்றழைக்கப்படும் இடத்தில் இருந்த நித்தவிநோதபுரம். இதுவும் ராஜராஜனின் விருதுகளுள் ஒன்றாகிய நித்த விநோதன் என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

இங்கு ராஜேந்திர சோழன் பெயரைக் கொண்ட பண்டித சோழ ஈஸ்வரம் என்ற கோயில் இருந்தது. (தொடரும்)

**வாசகர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன**

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை 27

அமெரிக்க தூதரகத்தில் ஆங்கிலம் கற்றுக்கொடுக்கும் பணி கிடைத்தது. அங்கு கற்பவர்கள் வயது வந்த வர்த்தகர்கள். அதிலிருந்து வந்த வருவாய் ஓரளவுக்கு போதுமானதாக இருந்தது.


ஆனாலும் அவளது தனிமையை அது போக்கவில்லை. அங்கு இருந்தவர்கள் நாட்டில் நடந்தவைகள் பற்றி ஓரளவுக்கு தெரிந்து வைத்திருந்தார்கள். ஆகவே அவற்றை மதிய போசன வேளைகளில் ஒபாமாவின் தாயோடு இரகசியமாக பகிர்ந்துகொள்வார்கள்.

ஏற்கனவே கம்யூனிஸம் இந்தோனேஷியாவூடாகப் பரவுவதைத் தடுக்க தன்னை வலிந்து கட்டிக் கொண்டிருந்தது அமெரிக்கா. அமெரிக்காவுக்கு மேலும் புதிய பிரச்சினையைக் கொடுத்து அதனை சீண்டினார் சுகர்ணோ.

சுகர்ணோ தனது தவறான தேசியவாதம் மற்றும் அணி சேராத அரசியல் போன்ற புதிய தத்துவங்கள் மூலம் நாட்டை திசை திருப்புகிறார் என்ற குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன.

லுமும்பா நாஸர் ஆகியவர்களுக்கும் இவருக்கும் எந்த வித்தியாசமுமில்லை. ஆகவே சி.ஐ.ஏ, சுகர்ணோவின் ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்தது என்று யூகம். யாருக்கும் இது உண்மையாகத் தெரியாது. ஆனால் உண்மையாகத் தெரிந்த விடயம் என்னவென்றால் ஆட்சி கவிழ்ப்புக்குப் பின் இராணுவம் இரும்புக்கரம் கொண்டு கம்யூனிஸ ஆதரவாளர்களை துடைத்தழித்தது தான். பலியானவர்களின் தொகை பற்றி பலவகையான கணக்கு ஐந்து இலட்சமாக இருக்கலாம் என்பதும் ஒன்று.

அண்மைய வரலாறு காணாதவகையில் மிக விரைந்து அரங்கேற்றிய மிகக் கொடுமையான அடக்குமுறை நடந்து ஓராண்டு முடிய முன்னர் தான் ஒபாமாவும் தாயாரும் ஜகார்த்தாவில் வந்து இறங்கினர். வரலாறு வேகமாக அடையாளம் தெரியாமல் முற்றாக மறைந்து மண்மூடிவிட்டது. வீதிகளூடே வேகமாக ஓடிய இரத்த ஆறுகளை உறிஞ்சிக் குடித்த வளம் மிகுந்த களிமண் போன்று அடையாளம் ஒன்றுமில்லாமல் போய் விட்டது.



புதிய ஜனாதிபதியின் இராட்சத சுவரொட்டிகளின் கீழ் மக்கள் ஒன்றும் நடவாதது போல தத்தம் பணிகளில் ஈடுபட்டனர். ஒரு நாடு தன்னை வளப்படுத்த முனைந்து கொண்டுள்ளது. இவை ஒபாமாவின் தாய்க்கு ஒருவித பயத்தைத் தந்தது.

அவளுக்கு நண்பர்கள் இன்னும் பல கதைகள் சொல்லி வைத்தனர். அத்தனையையும் லோலோவிடம் போய் அவை உண்மைதானா என்றறிய விரும்பினாள். இப்படியான நேரங்களில் அவர் மௌனியாகி விடுவது வழக்கம்.

அப்போதுதான் அவள் தன் ஆற்றாமையை லோலோவின் நெருங்கிய உறவுக்காரர் ஒருவருக்கு (மகப்பேற்று வைத்தியர்) முறையிட்டாள்.

இவர்தான் லோலோவை யுத்த காலத்தில் காப்பாற்றியவர். அவர் கூறியது அவளை இன்னும் ஏமாற்றத்துக்குள்ளாக்கியது.

லோலோ ஹவாயில் படித்துக் கொண்டிருந்த போது திடீரென நாடு திரும்புமாறு உத்தரவு வந்தது.

அவர் விமானத்திலிருந்து இறங்கும் போது கூட அவருக்கு அடுத்து என்ன நிகழப் போகிறது என்று தெரியாது. இராணுவம் அவரை நியூகினிக்கு அனுப்பியது .

அவர் ஓரளவு அதிர்ஷ்டசாலி என்று தான் கூறவேண்டும். கிழக்கு ஐரோப்பாவி லிருந்து திரும்பிய மாணவர்கள் ஒன்றில் காணாமல் போயினர் அல்லது சிறையில் வாடினர். அந்தப் பழைய சம்பவங்களை மறப்பதுதான் அவள் அவருக்கு செய்யக் கூடிய நன்மை என்றார்.

தாய் தாங்க முடியாத வேதனையுடன் அவர் வீட்டிலிருந்து கிளம்பி கால்நடையாக மனத்தில் வேதனையை சுமந்து கொண்டு தன்னை மறந்த நிலையில் நடந்தாள்.

அமெரிக்காவில் அதிகாரம் தன்னை வெளிப்படையாகக் காட்டாது மறைந்து நின்று செயல்படும்.

ஆனால் இந்தோனேஷி யாவில் அது ஒளிவு மறைவு இன்றி வெளிப் படையாக நின்று தன் வேலையைச் செய்யும். இந்த அதிகாரம் தன் மகனை தன்னிடமி ருந்து பிரித்து விடுமோ என்று பயந்தாள். லோலோ அதிகாரத்தோடு சேர்ந்து வாழப் பழகிக் கொண்டார்.

**ஜம்பொன்**

அரச எண்ணெய்க் கம்பனியில் உயர்ந்த பதவி கிடைத்தது. நல்ல சூழலில் வசதியான வீடு ரி. வி என்று நவீன வசதிகள் பல்கிப் பெருகின. அவள் இன்னுமொரு குழந்தைக்கு தாயானாள். பெண் குழந்தை. மாயா எனப் பெயரிட்டனர்.

தன் மகனைப் பற்றிய கவலை அவளை அடிக்கடி வருத்தியது. (தொடரும்)

# அளவெட்டி அருணோதயா கல்லூரி எல்லே போட்டியில் சம்பியன்

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையிலான எல்லே போட்டியில் ஆண், பெண் இரு பிரிவுகளிலும் அளவெட்டி அருணோதயா கல்லூரி சம்பியனானது.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான எல்லே இறுதிப் போட்டிகள் திங்கட்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஆண்கள் பிரிவிற்கான இறுதிப் போட்டிக்குத் தெரிவான அளவெட்டி அருணோதயா கல்லூரி அணியும் இணுவில் மத்திய கல்லூரி அணியும் மோதின.

இப்போட்டியில் அளவெட்டி அருணோதயா கல்லூரி அணி 3:0 என்ற கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

இதன்மூலம் இரண்டாமிடத்தை இணுவில் மத்திய கல்லூரி அணி பெற்றுக்கொண்டது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் மானிப்பாய் மெமோறியல் கல்லூரி அணியை 0:3 என்ற கணக்கில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் வெற்றிகொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற பெண்கள் பிரிவில் இறுதிப் போட்டிக்குத் தெரிவான அளவெட்டி அருணோதயா கல்லூரி அணியும் குழமங்கால் றோ.க.பாடசாலையும் மோதின.

இப்போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி 2:0 என்ற கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

இதன்மூலம் குழமங்கால் றோ.க. பாடசாலை இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணியை 0:2 என்ற கணக்கில் வெற்றி கொண்ட மானிப்பாய் மகளிர் கல்லூரி அணி மூன்றாமிடத் துக்கு தெரிவானது. (5-27)

# வலய மட்ட கூடைப்பந்தாட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் உடுவில் மகளிர் கல்லூரியும் முதலிடம்

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் பெண்கள் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரி அணியும் சம்பியனானது.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த வாரம் உடுவில் மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் இறுதிப் போட்டிக்குத் தெரிவான வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணியும் மோதின.

இப்போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 49:7 என்ற அடிப்படையில் இலகுவாக வென்று சம்பியனானது.

இதன்மூலம் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணி இரண்டாமிடத்துக்குத் தெரிவானது.

பெண்கள் பிரிவிற்கான இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணியும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணியும் மோதின.

இப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 45:5 என்ற கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

இதில் இரண்டாமிடத்தை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணி இரண்டாமிடத்தை பெற்றுக்கொண்டதுடன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை 9:15 என்ற கணக்கில் வெற்றிகொண்ட பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணி மூன்றாமிடமாகத் தெரிவானது. (5-27)

# குருநகரில் இன்று உதைபந்தாட்டம்

குருநகர் தூய வெற்றிநாயகி ஆலயத்தின் 16 ஆவது வருட நிறைவை முன்னிட்டு குருநகர் தூய பியோ விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி இன்று மாலை 3.30 மணிக்கு யாழ். சென்றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலாளர் மரியதாஸன் ஜெகூ கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை ஆர்.நேசராஜா கலந்து கொள்கிறார். (5)



யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுநிலை அதிபர் செல்வி பா.மார்க்கண்டு அவர்கள் வெற்றிக் கிண்ணம் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

# வடமராட்சி கல்வி வலய கபடி சுற்றுப் போட்டிகள்

(கரவெட்டி)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் கபடிப் போட்டிகள் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளதாக வடமராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.வல்லிபுரம் அறிவித்துள்ளார்.

இதில் இறுதிப்போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர், அனைத்துப் போட்டிகளும் பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் இடம்பெறுமெனவும் தெரிவித்துள்ளார். (5)

# உடுவில் கல்வி கோட்ட மட்ட வலைப்பந்தாட்டத்தில் இரு பிரிவுகளில் உடுவில் மகளிர் கல்லூரி சம்பியனானது

(வட்டுக்கோட்டை)

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டத்தில் 17, 19 வயதுப் பிரிவுகளில் உடுவில் மகளிர் கல்லூரி அணியும் 15 வயதுப் பிரிவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணியும் சம்பியனானது.

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் 19வயதுப் பிரிவிற்கான இறுதிப் போட்டிக்குத் தெரிவான உடுவில் மகளிர் கல்லூரி அணியும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணியும் மோதின.

இப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 30: 29 என்ற கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது.

தொடந்து நடைபெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டிக்கு தெரிவான உடுவில் மகளிர் கல்லூரி அணியும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணியும் மோதின. இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 32:17 என்ற கணக்கில் இலகுவாக வெற்றிபெற்று சம்பியனானது.

15 வயதுப் பிரிவினருக்கான வலைப் பந்தாட்ட இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை 14:16 என்ற கணக்கில் வெற்றிகொண்டு மருதனார்மடம் மகளிர் கல்லூரி அணி சம்பியனானது. (5-27)

# கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மூன்று போட்டிகளில் முதலிடம்

(கரவெட்டி)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பூப்பந்தாட்டம், மென்பந்து கிரிக்கெட் மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகளில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணி சம்பியனானது.

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி நடைபெற்று வருகிறது.

இதில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணி பூப்பந்தாட்டம், 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டம் மற்றும் மென்பந்து கிரிக்கெட் ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்று சம்பியனானது. (5)

# கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பாலசுப்ரமணிய வித்தியாலய முன்னாள் சிரேஷ்ட மாணவத் தலைவன் அமரர் கணபதிப்பிள்ளை பிரதீபனின் 12 ஆம் ஆண்டு நினைவாக பிரதீப் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இரண்டாம் கட்டப் போட்டிகள் இன்று நடைபெறுகிறது.

இச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கள் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறுகிறது. (5)







உடுவில் மகளிர் கல்லூரி ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக தாவரவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.சி.தவரஞ்சித், கல்லூரி அதிபர் திருமதி. சிராணிமிஸ்ஸ் ஆகியோர் அழைத்து வரப்படுவதையும், மாணவர்களின் அணிநடை நிகழ்வினையும், நாட்டில் சாந்தி சமாதானம் வேண்டி மாணவர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டிருப்பதையும் (படங்கள்:- பட்ங்களில் காணலாம்.

# இலங்கைக்கு நாங்கள் செல்லத் தயார்; கருணாநிதிக்கு நெடுமாறன் சவால்



(சென்னை)

தமிழ்நாட்டில் இருந்து இலட்சக் கணக்கான மக்கள் ஈழத் தமிழர்களுக்கு உதவ செல்வதற்குத் தயாராக இருக்கின்றோம். முதலமைச்சர் கருணாநிதி, அதற்குரிய நாளைக் குறிக்கட்டும் என இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடு மாறன் சவால் விடுத்துள்ளார். இது தொடர்பாக கடந்த வியாழக்கிழமை பழ.நெடுமாறன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கையை நோக்கி இராணுவ அணிவகுப்பு நடத்தட்டுமே! அந்த நாட்டின் அரச தலைவர் ராஜபக்ஷவை முறியடித்துத் திரும்பட்டுமே! இங்கே யார் குறுக்கே நிற்கிறார்கள்? நாளைக்கே தோணிகளை தயார் செய்யட்டும்.

அவை கள்ளத் தோணிகளாக இருந்தாலும் பரவாயில்லை. அவற்றில் படைகளை ஏற்றிச் செல்லட்டும். கோழைகளாகிய நாங்கள் கண்கொட்டாமல் அவற்றைப் பார்த்து களிக்கிறோம் கைதட்டி ஜெயகோசம் போடுகிறோம் என முதலமைச்சர் கருணாநிதி கூறியுள்ளார்.

இப்போது இவ்வாறு கூறுபவர் கடந்த காலத்தில் என்ன செய்தார் என்பதை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். யாழ். மக்களுக்கு உணவு அனுப்பாமல் சிங்கள அரசு பட்டினி போட்ட போது அந்த மக்களுக்கு உதவ 2007 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 12 ஆம் திகதி நாகப்பட்டினம், இராமேஸ்வரம் ஆகிய இடங்களிலிருந்து படகுகள் மூலம் உணவு - மருந்துப் பொருட்களை ஏற்றிச் செல்ல நாங்கள் முயன்ற போது எங்களுக்கு படகுகள் தரக் கூடாதென மீனவர்களை மிரட்டி எங்களைப் போக விடாமல் தடுத்து கைது செய்தவர் இதே முதலமைச்சர் கருணாநிதி என்பதை அவருக்கு நினைவு படுத்துகிறேன்.

இவ்வளவுக்கும் நாங்கள் போர்ப் படை திரட்டிச் செல்லவில்லை. மனித நேயத்துடன் எங்கள் சகோதரத் தமிழர்களுக்கு உதவிப் பொருட்களை ஏற்றிச் செல்லத்தான் முயன்றோம்.

அதையே தடுத்தவர் இப்போது படகுகளில் ஏறி நாங்கள் செல்வதற்கு குறுக்கே நிற்கப் போவதில்லை என அவர் கூறுவது உண்மையாக இருந்தால் தமிழ் நாட்டில் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் ஈழத் தமிழர்களுக்கு உதவச் செல்வதற்குத் தயாராக இருக்கிறோம். முதலமைச்சர் அதற்குரிய நாளைக் குறிக்கட்டும் என அவருக்கு அறைகூவல் விடுக்கிறேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-5)

## 40 தொகுதிகளில் தமிழர் கூட்டமைப்பு போட்டி

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் தனித்து போட்டியிடப் போவதாகவும் வரும் 30 ஆம் திகதி தேர்தல் அறிக்கை வெளியிடுவதாகவும் தமிழர் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இதுகுறித்து கூட்டமைப்பின் நிர்வாகி தன்மானன் செய்தியாளர்களிடம் கூறியதாவது, தமிழர்கள் தங்களை தமிழர்கள் என்று உணர்ந்தறிந்து ஒன்றுபட்டு தங்களது வாழ்வியலை மீட்டு மேம்படுத்துதற்காக பல்வேறு தமிழ் அமைப்புகள், தமிழ் ஆர்வலர்களை ஒருங்கிணைத்து தமிழர் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசும், தமிழகத்தில் உள்ள திமுக அரசும் இலங்கை தமிழர் விடுதலைப் போராட்டத்தையும், ஈழத்தமிழர்களையும் அழித்து வருகிறது. தற்போது உள்ள அரசியல் கட்சிகளிடம் மொழி, இனத்தை மேம்படுத்துவதற்கான வாழ்வியல் நோக்கங்கள் எதுவும் இல்லை. (ஓ-5)

# புத்தரை இலங்கைக்கு அனுப்பிய இந்தியாவே தமிழனை அழிக்க ஆயுதத்தையும் அனுப்புகிறது

## பேராசிரியர் அப்துல்காதர்

(புதுக்கோட்டை)

சாந்தியும் சமாதானமும் ஏற்படுத்த புத்தரை இலங்கைக்கு அனுப்பியது இந்தியா தான். இன்று தமிழனை அழிக்க ஆயுதத்தை அனுப்புவதும் இந்தியாதான் என புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலத்தில் நடைபெற்ற தமிழின உணர்வாளர்கள் கண்டன பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பேராசிரியர் அப்துல்காதர் கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

காங்கிரஸ் கட்சியினர் வெளியில் காந்தி மாதிரியும், உள்ளே எதிர் மறையாகவும் உள்ளனர். காங்கிரஸ் கட்சியினரிடம் சுத்தம் இல்லை.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு இலங்கையில் இருந்து அப்பாவி பொதுமக்கள் அகதிகளாக இராமேஸ்வரம் வந்தனர். அதில் ஒரு கைக்குழந்தை அழுதது. உடனேயே தாய் கைக்குழந்தைக்கு பால் கொடுக்க முயலுகிறாள். அப்போது காவல் துறையின் வான் ஒன்று சத்தம் போட்டுக் கொண்டே வருகிறது.

அப்போது கைக்குழந்தையும் மிரண்டு போகிறது. தாயும் அதிர்ச்சி அடைகிறாள். காரணம் இராணுவத்தினர் வந்துவிட்டார்களோ என்றுதான். இந்த அவலத்தை குறுந்தகடாக வெளியிட்டு உள்ளார்கள். ஈழத்தில் இனி மிஞ்சுவது அம்மா என்று சொல்லும் மாடுகளும், அக்கா என்று சொல்லும் கிளிகளும் தான். இதுகூட அவர்களுக்கு தெரிந்தால் அதையும் அழித்துவிடுவார்கள் என்றார். (ஓ-6)




இந்திய பாராளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வுடனா, அ.தி.மு.கவுடனா கூட்டணி அமைப்பது தொடர்பில் பா.ம.க பொதுக்குழு கூடி நேற்று முன்தினம் வாக்களிப்பு நடத்தியது. இதில் பாம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் பொதுக் குழுத் தேர்தலில் கூட்டணி அமைப்பது யாருடன் என்று கேட்ட போது...

# ஈராக்கில் கார் குண்டுவெடிப்பு 20 பேர் பலி ; 38 பேர் காயம்

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நிகழ்ந்த கார் குண்டு வெடிப்பில் 20க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகவும் 38க்கும் அதிகமானோர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாக்தாத்தின் முக்கிய சந்தைப் பகுதியில் இந்த குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. ஷியா முஸ்லிம்கள் அதிகளவில் இப் பகுதியில் வசிக்கின்றனர்.

குண்டுவெடிப்பில் இறந்தவர்களில் 4 குழந்தைகளும் 3 பெண்களும் அடங்குவர். குண்டுவெடிப்புப் பகுதியில் இருந்த ஏராளமான வாகனங்களும் எரிந்து சாம்பலாகியதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

ஈராக்கில் கடந்த 2003ஆம் ஆண்டிலிருந்து தற்போதுதான் வன்முறைகள் பெருமளவு குறைந்துள்ளதாக அமெரிக்கப் படைகள் கடந்த புதன்கிழமை தகவல் வெளியிட்டிருந்தன. இதற்கு அடுத்தநாளே இந்த குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது. (ஓ-6)

# பாகிஸ்தானில் தீவிரவாதிகள் மீது — மனித குண்டுத் தாக்குதல் —

## 11 பேர் பலி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் கடந்த வியாழக்கிழமை தீவிரவாதிகளை குறிவைத்து மனித குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

பழங்குடிகள் அதிகமாக வாழும் வட மேற்குப் பகுதியில் உள்ள பிரபலமான உணவகத்தில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டனர். 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். காயம் அடைந்தவர்கள் அனைவரும் அருகில் உள்ள அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தலிபான்களுக்கு எதிரான துருக்கிஸ்தான் பிட்டானி அமைப்பைச் சேர்ந்தவர்கள்.

தலிபான் தலைவர் பைதுல்லா மெஹ்சுத்துக்கு எதிராக துருக்கிஸ்தான் பிட்டானி அமைப்பைச் சேர்ந்தவர்கள் செயல்பட்டு வருகின்றனர். இதனால் அவர்களைக் குறிவைத்து இந்த தாக்குதலை தலிபான்கள் நிகழ்த்தியிருக்கலாம் என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இந்த தாக்குதலுக்கு தலிபான்கள் உட்பட எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை. (ஓ-6)

# இந்தியாவின் வளர்ச்சியால் சீன இராணுவம் கவலை

## அமெரிக்கா தகவல்

(வோஷிங்டன்)

இந்தியா, பொருளாதாரம், அரசியல், இராணுவம் ஆகியவற்றில் மாபெரும் சக்தியாக வளர்ந்து வருவது குறித்து சீன இராணுவம் கவலை தெரிவித்துள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

இந்திய - சீன உறவுகள் குறித்தும், ரஷிய - மத்திய ஆசிய குடியரசுகள் குறித்தும் பென்டகன் வெளியிட்டுள்ள 78 பக்க அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பாக இந்திய - சீன எல்லைப் பிரச்சினைகள் குறித்தும், இரு நாடுகளிடையே நடைபெற்ற உயர்நிலை வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகள், கூட்டு இராணுவ நடவடிக்கைகள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளும் 2007இல் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது 11.4 பில்லியன் டொலர்களாக இருந்த வர்த்தகத்தை 2010 ஆம் ஆண்டுக்குள் 40 பில்லியன் டொலர்களாக மேம்படுத்துவது என ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன.

இரு நாடுகளும் எல்லைப் பிரச்சனை தொடர்பாக பல்வேறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளன. இரு தரப்பு இராணுவ உறவுகள், பாதுகாப்பு மேம்பாடு குறித்து உயர்நிலை அதிகாரிகள் அளவில் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் பிராந்தியளவிலும் சர்வதேச அளவிலும் இந்தியாவின் சீரிய வளர்ச்சி குறித்தும் இராணுவ வல்லமை பெற்ற நாடாக இந்தியா வளர்ந்து வருவது குறித்தும் சீன இராணுவம் கவலையடைந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# நேபாள மக்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சி

(காத்மாண்ட்)

நேபாள மக்கள் அனைவருக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்க வேண்டும் என, ஆளும் நேபாள கம்யூனிஸ்ட் - மாவோயிஸ்ட் கட்சி யோசனை தெரிவித்துள்ளது.

நேபாளத்தில் கலகத்தில் ஈடுபட்டு வந்து மாவோயிஸ்ட்டுகள், கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு தங்களது தீவிரவாத நடவடிக்கைகளைக் கைவிட்டு தேசிய அரசியலுக்குத் திரும்பினர்.

இந்த நிலையில், நேபாள மக்கள் அனைவரும் கட்டாய இராணுவக் கல்வியும், அடிப்படை இராணுவப் பயிற்சியும் பெற வேண்டும் என மாவோயிஸ்ட்டுகள் யோசனை தெரிவித்துள்ளனர். ஆளும் நேபாள கம்யூனிஸ்ட் - மாவோயிஸ்ட் கட்சி தயாரித்துள்ள நேபாள அரசியல் சட்ட வரைவுத் திட்டத்தில் இதற்கான சரத்துகள் இடம் பெற்றுள்ளன.

நேபாளத்தில் பல கட்சி ஜனநாயக ஆட்சி முறை வலுப்பெற வேண்டும் என்பதுதான் ஆளும் நேபாள கம்யூனிஸ்ட் மாவோயிஸ்ட் கட்சியின் கொள்கை என்றும், இத்தகைய ஆட்சியில் மக்கள் தான் மேலாதிக்கம் செலுத்தக் கூடியவர்கள் என்றும், மக்களுக்கு அனைத்து அடிப்படை உரிமைகளும் வழங்கப்பட வேண்டும், பத்திரிகை சுதந்திரமும் நிலைக்க வேண்டும் என்றும் பிரதமர் பிரசண்டா வலியுறுத்தினார்.

தனது கட்சி தயாரித்துள்ள நேபாள புதிய அரசியல் சட்ட வரைபு அறிக்கையை அரசியல் சாசன நிர்ணய சபையில் கடந்த புதன் கிழமை தாக்கல் செய்து பேசுகையிலேயே பிரசண்டா இதைத் தெரிவித்தார். (ஓ-6)

7-I

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

இப்போதெல்லாம் மழையை எதிர்வு கூற முடிவதில்லை. எப்போது மழை பெய்யும் என கூற முடியாதிருக்கின்றது. காலம் தன் நிலையை கண்டபடி மாற்றத் தொடங்கிவிட்டது.

ஒரு வருடத்தில் நவம்பர் மாதத்திலும் இன்னொரு வருடத்தில் டிசம்பர் மாதத்திலும் மழை பெய்கின்றது. கால போகம் MAHA மழையை முழுமையாக நம்பி செய்கின்ற பயிர்ச் செய்கை. மழையின் வருகையை எதிர்வு கூற முடியாதுள்ளதனால் உழவு எப்போது செய்வது? நடுகையை எப்போது செய்வது? நட்ட பயிரை கருகாது எப்படி பாதுகாப்பது? மழை இல்லை என அங்கலாய்த்துக் கொண்டிருந்த எங்களூர் விவசாயிகளை மழை பெய்யத் தொடங்கி, வெள்ளமாகி, நட்ட பயிரெல்லாம் நீரில் மூழ்கி அழுகுகின்றதே என மீண்டும் அங்கலாய்க்க வைத்து விட்டிருக்கின்ற போது மீண்டும் நிலம் காய்ந்து ஏங்க வைத்திருக்கிறது. பயிர் காய்ந்து போனால் நீரிறைக்கும் பம்பி பூட்டி நீரிறைத்து அல்லது பட்டையினால் துரவிலிருந்து அள்ளி இறைத்தாவது ஓரளவிற்கேனும் காப்பாற்றலாம்.

வசதியுள்ளவர்கள் செய்து கொள்ளலாம். ஆனால் மழைநீர் வெள்ளமாகி கடலுக்குள் போகாது திரும்பியதை எதுவுமே செய்ய முடியாது. வெள்ளம் தானாக வற்றும் வரை பொறுமையாயிருப்பதே ஒரே வழி சென்ற வருட இறுதி மாதங்களில் இந்த விபரீதத்தை நிஷா மூலமாக வட பகுதி மக்கள் நன்கு அனுபவித்தனர்.

காலநிலை மாறுவதும் வரட்சியும் அதனுடன் இணைந்து வெள்ளமும் எமது நாட்டில் அவ்வப்போது நடந்திருந்தாலும் அண்மைக் காலங்களில் இந்நிகழ்வுகள் அதிகரித்துக் கொண்டு போவதனை அவதானிக்கலாம்.

**வளிமண்டல வெப்பநிலை அதிகரிப்பு**

உலகளாவிய ரீதியிலே இவ்வாறான காலநிலை மாற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்திருக்கின்றன.

காலநிலை மாற்றங்களுக்கான நாடுகளுக்கிடையிலான ஒன்றியத்தினது தகவலின் படி சென்ற நூற்றாண்டில் உலகத்தினது வளிமண்டல வெப்பநிலை 0.76°C இனால் அதிகரித்திருக்கின்றது. இந்த நிலை 2050ஆம் ஆண்டளவில் 2°C இனால் அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான வளிமண்டல வெப்பநிலையின் அதிகரிப்பினால் கடல் நீர்மட்டம் அதிகரிப்பதும், பனிப்பாறைகள் உருகுவதனால் அவை காணாமல் போவதும், மழைநீர் வீழ்ச்சியில் பாரிய மாற்றங்கள் ஏற்படுகிறது. இதன் மூலமாக உள்ளூரினது உற்பத்தி திறனில் எதிர்பாராதளவிற்கு வீழ்ச்சியை ஏற்படுத்தி விடுகின்றது. வெறுமனே 1°C அல்லது 2°C வெப்பநிலை அதிகரிப்பு பாரிய விளைவுகளை ஏற்படுத்துகின்றதை பார்த்தீர்களா?

அநேகமான கிராமப்புறங்களில் காலநிலை மாற்றத்தினை பொதுவாக அனுபவிக்கக் கூடியதாயிருக்கின்றதுடன் விவசாயிகள் இவ்வாறான உள்ளூருக்கான வளிமண்டலத்திலேற்படும் மாற்றங்களுக்கு நேரடியாக முகங்கொடுக்க வேண்டியும் ஏற்பட்டுள்ளது.




இவை அனைத்திற்கும் குறிப்பாக காலநிலை மாற்றத்திற்கான அடிப்படைக் காரணிகளாக காடுகள் அழிப்பு அல்லது வனவளபாதிப்பும் மண்ணரிப்பும் அதனுடன் இணைந்ததாக இயற்கை அழிவுகள் நிறைந்த இடத்தில் மக்கள் தொகை அதிகரித்திருப்பதுவுமாகும்.

**காலநிலை மாற்றத்தினால் பாதிப்பு**

காலநிலை மாற்றமென்பது உலகளாவிய ரீதியில் நடைபெறுகின்ற நிகழ்வு. ஆனால் இதற்கு அதிகமாக முகங்கொடுப்பவர்கள் கிராமத்து மக்கள் தான்.

இதில் அந்தந்த இடத்திற் குரிய நிலத்தின் ஏற்ற இறக்கங்கள் மற்றும் அந்த இடத்தின் பௌதீகத் தன்மை என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. இவ்வகையான மாற்றங்களின் விளைவுகள் நேரடியாக விவசாய குடும்பங்களின் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையிலும் அவர்கள் எதிர் நோக்கக்கூடிய மனவழுத்தத்தையும் அதன் மூலமான பாரியளவிலான மாற்றத்தினையும் சுட்டி நிற்கின்றன.

இவ்வாறான மாற்றங்கள் இறுதியில் அந்தந்த சமூகத்தின் தாங்கும் தன்மையையும் குறிப்பாக தனியொரு விவசாய குடும்பத்தையும் பயிருற்பத்தியில் பயிர் செய்கை நடவடிக்கையில், அவர்களது ஈடுபாட்டை நிர்ணயிப்பதாக அமைந்து விடுகின்றன.

வேளாண்மையே நிச்சயமில்லாது நிசப்தமாகிவிடும் நிலை இதனால் ஏற்பட்டதன்றோ, இங்கே காலநிலை மாற்றங்கள் சரியாக எதிர்வு கூறப்படும் போது அம்மாற்றங்களை உள்வாங்கி பயிர்ச்செய்கையை ஓரளவிற்கேனும் திட்டமிட்டு, தேவை கருதி மாற்றியமைத்து விவசாயிகள் செய்யக்கூடியதாக இருக்கும். இவ்வாறான காலநிலை மாற்றங்கள் சார்ந்த செய்திகளை, அறிவினை விவசாய பெருமக்களுக்கு வழங்கக்கூடியதான நிலைக்கு நாம் முன்வரவேண்டும். இதில் ஊடகத்துறையினதும் காலநிலை அவதான நிலையத்தினதும் இணைந்த பணியும் வரவேற்கத்தக்கது.

காலநிலை மாற்றங்களின் எதிர்வு கூறுதலும், துல்லியமான கணிப்பிடுதலும் இனி வரும் பசுமைப்புரட்சியின் அடித்தளமாக இருக்கவேண்டும். விவசாயம் கற்கும் மாணவர்களும் விவசாய துறையினரும் இது விடயத்தில் அறிவினையும் ஆய்வுகளையும் முடுக்கி விடுதல் சிறந்ததாகும்.

**காலநிலை மாற்றம் குடும்பங்களிலேற்படுத்தும் தாக்கம்**



வேளாண்மையே முற்று முழுதாக காலநிலை மாற்றத்தில் தங்கியிருக்கும் நிலை என்றாகிவிட்டது. "காலத்தே பயிர்செய்" என்னும் முதுமொழி எவ்வளவுக்கு பொருத்தம். ஆனால் அவ்வப்போது திடீர் திடீர் என மாற்றமடைவதை எப்படி இலகுவில் எதிர்வு கூற முடியும்? விஞ்ஞானத்தின் வளர்ச்சியும் பயன்பாடும் இது விடயத்தில் பாமர மக்களை, எங்களூர் விவசாயிகளை சென்றடைய வேண்டும். பசுமையில் புதுமைகள் அவசியம் செய்திட வேண்டும்.

**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

காலநிலை மாற்றம் வேளாண்மையை பாதிக்கும் போது வேளாண்மையும் முற்று முழுதாக நம்பியிருக்கும் விவசாயிகளை, அவர்களது குடும்பங்களை குடும்ப உறுப்பினர்களை, அவர்கள் சார்ந்த உள்ளூர் அமைப்புக்களை, அவர்களது தொடர்பாடலை நிச்சயமாகவே பாதிப்படையச் செய்யும்.

காலநிலை மாற்றங்கள் இந்த பூமிப்பரப்பில் அவ்வப்போது நிகழ்ந்திருந்தாலும் அதற்கேற்ப வேளாண்மையில் இயற்கையால் வலிந்து ஏற்படுத்தப்பட்ட இம் மாற்றங்களுக்கு முகங் கொடுத்து பின் ஈடு கொடுத்து ஒப்பேற்றுதல் இலகுவான காரியமன்று. (தொடரும்)

# நார்ப்பொருளடங்கிய தாவர உணவுகளைப் பின்தள்ளாதீர்

நவீன கால மனிதவர்க்கமானது நவ நாகரீகத்தினை நோக்கியே நடைபோடுகின்றது. இந்த வகையில் இன்றைய மனிதனானவன் தனது உணவுப் பழக்க வழக்கங்களையும் வெகுவாக மாற்றி வருகின்றான். பெரும்பாலனவர்கள் உணவின் தரத்தினை அறியாமல் சந்தையில் கிடைக்கின்ற கவர்ச்சியான, சுவையான, துரித உணவுப் பொருட்களிற்கே (Junk Food) முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

குறிப்பாக சிறு பிள்ளைகள் இவ்வாறான தரமற்ற உணவுப் பொருட்களிற்கு சிறுவயதிலிருந்தே அடிமைப்படுவதனால் அவர்கள் வளர்ந்து வருகின்ற காலங்களில் பல உடல் உபாதைகளிற்கு ஆளாக நேரிடுகின்றது. தானிய வகைகளை, மரக்கறிகளை உணவில் அதிகளவில் சேர்த்தல், உணவு உண்டபின் பழங்களை உட்கொள்ளல் என்பன அவசியமாகும். ஆனால் இவ்வாறான தரமான உணவுப் பழக்க வழக்கங்களைப் பெரும்பாலானவர்கள் கைக்கொள்வதில்லை. ஏனெனில் அதற்கு அவர்களிற்கு நேரம் கிடைப்பதில்லை. அத்துடன் கேக், ஐஸ்கிறீம், சொக்கிலேட் போன்ற நாவிற்குச் சுவையான உணவுப் பொருட்கள் இருக்கும் போது மக்கள் ஏன் இவற்றை நாடப் போகின்றார்கள்? அதுவும் சரிதான். ஆனால் முன்னைய காலத்திலே சலரோகம், கொலஸ்ரோல், பிறசர் என்று யாராவது நடுத்தர வயதில் 'கிளினிக்' சென்றார்களா? இன்று இவ்வாறான நோய்கள் இல்லாத ஒரு வீட்டைக் கூடக் கண்ணால் காண முடிவதில்லை.

எமது உணவிலே நார்ப்பொருட்களைக் கட்டாயமாகச் சேர்க்க வேண்டியது அவசியமாகும். நார்ப் பொருட்கள் என்று கூறும் போது தாவரக் கலச்சுவரில் காணப்படுகின்ற பல் சக்கரைட்டுக்கள் ஆகும். உதாரணமாகச் செலுலோசு, அரைச் செலுலோசு, பெக்ரின், இலிக்னின் என்பன முக்கியமான நார்ப்பொருட் கூறுகளாகும். இவை போசனைப் பொருட்கள் என்பதன் கீழ் அடங்குவதில்லை. ஏனெனில் இக்கூறுகள் மனிதனின் உணவுக் கால்வாய்த் தொகுதியில் காணப்படுகின்ற சமிபாட்டு நொதியங்களினாற் சமிபாடு அடைவதில்லை. ஆனால் அன்றாட உணவில் இவை அடங்கியிருக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். மரக்கறிகள், பழவகைகள், தோல் நீக்காத தானியங்கள், தவிடு, பனம் பொருட்கள் என்பவற்றில் நார்ப்பொருட்கள் அடங்கியுள்ளன. இவை பல வழிகளில் நன்மை பயக்குகின்றன அவையாவன,

**மலச்சிக்கலைத் தடுத்தல்**

நார்ப்பொருட்கள் சமிபாட்டுத் தொகுதியில் நீரினை அகத்துறிஞ்சுவதனால் சமிபாட்டு மீதிகளின் (Faccal Matters) திணிவினையும், கனவளவினையும் அதிகரிக்கின்றன. இதனால் அவை மிருதுவாக்கப்படுவதுடன் பெருங்குடலுடன் தொடுகையிலுள்ள நேரம் குறைக்கப்படுகின்றது. இதனால் மலச்சிக்கல் தடுக்கப்படுகின்றது.



**குருதியில் காணப்படுகின்ற கொலஸ்ரோலின் அளவினைக் குறைத்தல்.**

பித்தத்தின் உருவாக்கத்தில் கொலஸ்ரோல் பங்கு வகிக்கின்றது. இவ்வாறு உருவாக்கப்பட்ட பித்தமானது மீளகத்துறிஞ்சப்பட்டு மீள் சுற்றோட்டமாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் நார்ப்பொருட்களை உணவில் சேர்க்கும் போது அவை பித்தத்தின் மீளகத்துறிஞ்சலையும் மீள் சுற்றோட்டத்தினையும் தடுக்கின்றன.

இதனால் பித்தமானது ஈரலினால் புதிதாக உருவாக்கப்படுகின்றது. இதன்போது கொலஸ்ரோல் ஆனது உபயோகிக்கப்படுவதனால் குருதியில் காணப்படுகின்ற கொலஸ்ரோலின் அளவானது குறைக்கப்படுகின்றது. அது மட்டுமன்றி அதிக கொலஸ்ரோலின் விளை வாக ஏற்படுகின்ற இருதய நோய்களும் தடுக்கப்படுகின்றது.

**புற்று நோயைத் தடுத்தல்**

நாம் உண்ணுகின்ற உணவில் புற்று நோயினை ஏற்படுத்தவல்ல காரணிகள் (Carcinogenic Compounds) காணப்படலாம். பீடைநாசினி மீதிகள் உள்ள உணவினை உண்ணல், அங்கீகரிக்கப்படாத நிறமூட்டிகளால் நிறமூட்டப்பட்ட உணவுகளை உண்ணல் என்பன புற்றுநோயினை ஏற்படுத்தவல்ல சில காரணிகளாகும். இவை குடலுடன் நீண்ட நேரம் தொடுகையில் உள்ள போது அவை பெருங்குடலில் புற்று நோயினைத் தோற்றுவிக்கலாம். நார்ப்பொருட்கள் சமிபாட்டு மீதிகளை விரைவாக வெளியேற்றுவதனால் இவ்வாறான காரணிகள் குடலுடன் தொடுகையிலுள்ள நேரம் குறைக்கப்படுகின்றது. அத்துடன் நீரினை அகத்துறிஞ்சுவதனால் அவற்றின் செறிவினையும் குறைக்கின்றன. இதனால் குடல் வாலிலிருந்து மலக்குடல் வரையிலுள்ள பெருங்குடலின் பகுதியில் ஏற்படுகின்ற புற்றுநோயானது (Colon Cancer) தடுக்கப்படுகின்றது.

**நச்சுத்தன்மையான உலோகங்கள் உடலினுட் சேர்வதைத் தடுத்தல்**

வீதியோரங்களில் காணப்படுகின்ற தாவரங்களில் வாகனப் புகையில் காணப்படுகின்ற ஈயம் போன்ற உலோகங்கள் படிவடைந்து காணப்படலாம். நாம் அவற்றினை உணவாக உட்கொள்ளும் பொழுது அவை எமது உடலில் செறிவாக்கப்படலாம். ஆனால் நார்ப் பொருட்கள் ஈயம், ஆசனிக், கட்மியம் போன்ற உலோகங்களுடன் இணைந்து அவற்றை உடலிலிருந்து வெளியேற்றுகின்றன.

**நீரிழிவு நோயாளிகளிற்குத் தேவையான இன்சுலினின் அளவைக் குறைத்தல்**

நார்ப்பொருட்கள் காபோவைதரேற்றுக்களின் சமிபாட்டினையும் அகத்துறிஞ்சலையும் தாமதிப்பதனால் குருதியில் சடுதியாக குளுக்கோஸ்மட்டம் உயர்வடைவதனைத் தடுக்கின்றன.

**உடற்பருமனைக் குறைத்தல்**

கொழுப்பு நிறைந்த உணவினையும் நார்ப்பொருளடங்கிய உணவினையும் ஒப்பிடும் பொழுது நார்ப் பொருளடங்கிய உணவின் கலோரிப் பெறுமானம் குறைவாகும். எனவே இவற்றை உணவாக உட்கொள்ளும் போது உணவு உட்கொண்ட பூரண திருப்தியினை அனுபவிப்பதுடன் உடல் பருமனடைவதும் தடுக்கப்படுகின்றது.

இவற்றுடன் போதியளவு நார்ப்பொருட்கள் உணவில் காணப்பட்டால் அவை இலக்ரோஸ் உடன் இணைந்து பெருங்குடலில் காணப்படுகின்ற உடலிற்குத் தீங்கிழைக்காத நுண்ணங்கிகளினால் இலத்திரிக்கமிலமாக மாற்றப்படுகின்றது. இதனால் $P^H$ ஆனது குறைக்கப்பட்டு அமிலத்தன்மை ஏற்படுகின்றது. இந்த அமிலத்தன்மையானது நோயினை உருவாக்கத்தக்க நுண்கிருமிகளின் வளர்ச்சியைக் குடலினுட் தடுக்கின்றது.

**பொ. பமித்திரா**
விவசாய இரசாயனவியல் (சிறப்பு)
தகவல் தொடர்பு மையம்
விவசாய பீடம்

"*அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்*" நார்ப்பொருட்களை உணவில் சேர்ப்பது அவசியம். எனினும் ஒரே தடவையில் அளவுக்கதிகமாக இவற்றைச் சேர்க்கக் கூடாது. இவ்வாறு சேர்த்தால் அவை குடலின் சமநிலைத் தன்மையினைக் குலைத்து விடும். எனவே தினமும் தேவையான அளவுகளில் இவற்றைச் சேர்த்து நன்மை அடையலாம். அதாவது கிடைக்கின்ற ஓய்வு நேரங்களிலே வீட்டுத் தோட்டத்தினை அமைத்து அதிலே கீரை வகைகள், மரக்கறிகள், பழவகைகள் என்பவற்றைப் பயிரிட்டு எமது நாளாந்த உணவில் அவற்றைச் சேர்த்துப் பயனடைவோமாக.

எத்தனையோ அநீதிகள் –பழக்கத்தால் நீதிகளாக தோன்றுகின்றன.

– ஆப்கானிஸ்தான்

வலம்புரி

## போக்குவரத்து நடைமுறையில் ‘கலாசாரம்’ பின்பற்றப்பட வேண்டும்

யாழ்ப்பாணத்தில் தற்போது போக்குவரத்து கண்காணிப்புப் பொலிஸார் தீவிரமாகச் செயற் பட்டு வருகின்றனர்.

வாகன சாரதிய அனுமதிப்பத்திரம், காப் புறுதிப் பத்திரம், வரிச் சான்றிதழ் என்பவற்று டன் தலைக்கவசம் அணிவது தொடர்பிலும் இறுக்கமான நடைமுறைகளைப் பொலிஸார் பின்பற்றுகின்றனர்.

நடைமுறையிலிருக்க வேண்டிய போக்குவ ரத்து சட்ட விதி முறைகளை அமுல்படுத்துவதும் அவற்றை மக்கள் பின்பற்றுவதும் கட்டாயமா னதாகும்.

எனினும் தலைக்கவசம் (ஹெல்மெட்) அணி வது பாதுகாப்பு விவகாரங்களுக்குப் பழுதான விடயமாக யாழ்ப்பாணத்தில் கருதப்பட்ட சந் தர்ப்பங்களும் உண்டு.

இதன் காரணமாக தலைக்கவசங்களை வேண்டுவதில் – வேண்டியவற்றைப் பாதுகாப்ப தில் இருந்திருக்கக் கூடிய அக்கறையீனம் நியாயப்படுத்தப்படக் கூடியதே.

எனவே மோட்டார் சைக்கிளில் செல்லும் போது தலைக்கவசம் அணியும் விடயத்தில் பயணிகளுக்கு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்குவது நியாயமானதாகும்.

இது விடயத்தில் போக்குவரத்துப் பொலி ஸார் கருத்தில் எடுப்பர் என நம்பலாம்.

இதற்கு மேலாக வாகனங்களைச் செலுத் தியவாறு கையடக்கத் தொலைபேசியில் உரை யாடுவது, பஸ் தரிப்பிடமில்லாத இடங்களில் பஸ்களை நிறுத்தி பயணிகளை ஏற்றுவது, போட்டியின் நிமிர்த்தம் வடபிராந்தியப் போக்கு வரத்து பஸ்ஸுடன் தனியார் பஸ்கள் ‘தட்டு மறிப்பது’ உள்ளிட்ட விடங்களையும் பொலி ஸார் கண்காணித்து உரியவர்களை நீதிமன் றத்தில் நிறுத்த நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையும் உண்டு.

இவை அமுலாக்கப்படும் அதேநேரம், மோட் டார் சைக்கிளில் பின்னிருக்கையில் அமர்ந்து செல்லும் பெண்கள், ஒரே பக்கத்தில் அமரக் கூடாதெனவும், இருபுறமும் கால்களை வைத்தி ருக்கும் வண்ணம் அமருமாறு பொலிஸாரி னால் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

பாதுகாப்பு விடயங்களில் பொலிஸாரின் அறிவுரை ஏற்புடையதாயினும் எமது தமிழ்ப் பண்பாட்டில் –யாழ்ப்பாண கலாசாரத்தில் பெண் கள் சேலை அணிந்து செல்வதே வழமையா கும்.

இந்நிலையில் சேலை அணிந்தவாறு மோட் டார் சைக்கிளில் பயணிக்கும் போது ஒரு புற மாக அமர்ந்திருப்பதே சாத்தியப்பட்டான விடய மாகும்.

எனவே இது விடயத்தில் பொலிஸார் தமிழ்ப் பெண்களின் கலாசார நெறிமுறைகளுக்கு மதிப்பளித்துச் செயற்படவேண்டுமென்பது பலர தும் கோரிக்கையாகும்.

# ஹோம்ஸின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த தீர்மானம்

## அமைச்சர் சமரசிங்க

(கொழும்பு)

வவுனியாவில் தங்கியுள்ள அகதிகள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஆணையாளர் சேர் ஜோன் ஹோம்ஸ் முன்வைத்துள்ள பரிந்துரைகளை நடை முறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித் துள்ளது. ஒரு சில விடயங்களை உடனடியாக நிறைவேற்ற முடியாது. எனினும், பெரும்பாலான பரிந்துரைகளை ஏற் கனவே அமுல்படுத்த ஆரம்பித்துவிட்டோம். ஐ.நாவுடன் இணைந்து செயற்பட இலங்கை அரசாங்கம் தயாராகவே உள்ளது என்று மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

இலங்கையின் அழைப்பை ஏற்று ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஆணையாளர் சேர் ஜோன் ஹோம்ஸ் அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு வவுனியாவுக்கும் சென்று வந்தார். அங்கு வன்னிப் பகுதியில் இருந்து வந்துள்ள மக்களுக்கு அரசாங் கத்தால் செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் தொடர்பில் திருப்தி வெளியிட்டார்.

விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடந்த 10 ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்தில் வவுனியாவில் அமைந்தள்ள முகாம்கள் தொடர்பில் அவர் ஐந்து யோசனைகளை பரிந்துரை செய்திருந்தார். முத லாவது விடயமாக அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு வரு கின்ற மக்களை சந்தித்து பேசுவதற்கு சர்வதேச செஞ் சிலுவைச் சங்கத்துக்கும் ஐ. நா.வின் ஏனைய முகவர் நிலையங்களுக்கும் அனுமதி வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



அதற்கு அர சாங்க தரப்பில் எந்த பிரச்சினையும் இல் லை. அங்கு வருகி ன்ற மக்களை அவர் கள் சந்தித்து கலந் துரையாடலாம் அதற்கான ஏற் பாடு கள் செய்யப் பட்டுள் ளன.

இரண்டாவது யோசனையாக முகாம்களின் முகாமைத்துவம் இராணுவமல்லாத வர்களிடம் கைய ளிக்கப்பட வேண் டும் என்று கேட்டுள் ளார். அந்த யோச னையையும் ஏற் றுக் கொள்கின்றோம்.

மூன்றாவதாக முகாம்களுக்கு செல் வதற்கு ஐக்கிய நாடு கள் சபையின் முக வர் நிலையங்களுக் கும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுள்ளார். அதனையும் ஏற்றுக் கொள்கின்றோம்.

நான்காவதாக சுதந்திர நடமாட்டம் தொடர்பில் பரிந்துரை செய்துள்ளார். அந்த யோசனை சற்று சிக்கலானது. மக்கள் சுதந்திரமாக நடமாடவேண்டும் நாமும் அதனை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் தற்போது சில நடைமுறை சிக்கல்கள் உள்ளன.

ஐ.நா ஆணையாளரின் இறுதிப் பரிந்துரையானது நிலக் கண்ணி வெடிகளை அகற்றுவது தொடர்பானதாகும். அத னையும் விரைவாக செய்து வருகின்றோம். 2009 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் இடம் பெயர்ந்துள்ள மக் களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை கூறுகின்றேன் என்று தெரிவித்தார். (ஓ-6)

# ஜனாதிபதி மஹிந்த தலைமையில் பாதுகாப்பு உயர்மட்ட மாநாடு

(கொழும்பு)

வன்னிப் பெருநிலப் பரப்பில் இலங்கை படையினருக்கு ஏற்பட்டு வருகின்ற இழப்புக்கள் குறித்து இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட மூத்த இராணுவத் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சின்அதிகாரி ஆகியோரை அழைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்து கலந்துரையாடியதாக உள்ளக தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

முல்லைத் தீவிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் படையினருக்கு ஏற்பட்டு வரும் இழப்புக்கள் தொடர்பாக இச் சந்திப்பில் ஆராயப்பட்டது என்றும் குறிப்பாக முல்லைத் தீவில் விடுதலைப் புலிகளின் கடுமையான தாக்குதல் முறை கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது எனவும் கூறப்படு கின்றது.

நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை நடைபெற்ற இச் சந்திப்பு குறித்து ஊடகங்களுக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளையில் இலங்கைப் படைகளின் பதவி மாற் றங்கள் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பான விடயங்களும் சந்திப்பின் போது ஆராயப்பட்டுள்ளது என்று இலங்கை பாதுகாப்பு அமைச்சுவட்டராங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலை மையில் பாதுகாப்பு உயர் மட்ட மாநாடு ஒன்றுஇடம் பெற்றுள் ளதாக இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-6)

## மனித உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பான பயிற்சி நெறிகள்

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் உள் நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான செயற்திட்டத்தின் மூலம் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான பயிற்சி நெறிகள் இம்மாதம் 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இப்பயிற்சி நெறியினை மேற் கொள்வதற்கு கடந்த வரு டம் விண்ணப்பித்திருந்தவர்களில் 30 பேர் பிரதேச ரீதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இப்பயிற்சிகள் 11 நாட்கள் வழங்கப்படும்எனஅறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-30)

## பரு.பிரதேச செயலக பிரிவில் 101 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

(மருதங்கேணி)

பருத்தித்துறைப் பிரதேச செயலக அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மற்றும் கம நெகும வேலைத்திட்டங்கள் உள்ள டங்கலாக இவ்வாண்டிற்கான 101 வேலைத் திட்டங்க ளுக்கு ரூபா 35 மில்லியன் மதீப்பிடு செய்யப்பட்டு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள் ளதாக பரு. பிரதேச செயலர் தெரி வித்துள்ளார்.


அனுமதி கிடைக்கப் பெற்றதும் இவ்வேலைத்திட்டங்களை ஆரம் பிக்க முடியும் எனவும் அண்மை யில் நடை பெற்ற பிரதேச ஒழுங் கிணைப்பு குழு கூட்டத்தில் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## சுவாமி விவேகானந்தரின் வீர முரசு பலம்



இயற்கைக்கு அப்பால் செல்லப் போராடிக் கொண்டிருக்குமள விற்கு, மனிதன் மனிதனாகிறான். இந்த இயற்கை அகம், புறம் இரண்டுமாகும். புற இயற்கையை வெல்வது நன்மையும் மிகுந்த பெருமையும் தான்; ஆனால் அக இயற்கையை வெல்வதோ அதை விடச் சிறப்பு வாய்ந்தது. நட்சத்திரங்களையும், கிரகங்களையும் அடக்கியாளும் விதிகளை அறிவது பெருமையும் நன்மையும் தான். ஆனால் மக்களின் ஆசை களையும் உணர்ச்சிகளையும் மனவலிமையையும் அடக்கியாளும் விதிகளை அறிவது அளவில்லாப் பெருமை தரும் ஒன்றே.

எல்லா விலங்குகளையும் எல்லாத் தேவ தூதர்களையும் விட மனிதன் உயர்ந்தவன்; மனிதனை விட உயர்ந்தவர்கள் யாரும் இல்லை. தேவர்களும் மீண்டும் கீழே வந்து மனித உடல் வாயிலாகவே முக்தி பெறமுடியும். மனிதன் மட்டுமே பூரணமடைகிறான்; தேவர்களாலும் அடைய முடியாது.



யாழ். மத்திய கல்லூரியினால் உயர்தர மாணவர்களின் தமிழ்ப் பேச்சு விவாதத்திறனை வளர்த்தற் பொருட்டு யாழ். மாவட்ட பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட விவாத மேடை அண்மையில் யாழ். மத்தியகல்லூரிக்கும், யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இந்து மகளிர் கல்லூரி மாணவி எஸ்.டனிஷா விவாதிப்பதையும், நடுவராக கலந்து கொண்ட கலாநிதி ரி. வேல்நம்பி மற்றும் இவ்விவாதத்தில் வெற்றியீட்டிய யாழ் மத்தியகல்லூரி மாணவர்களான வ. நிரோஜன், ச. நிவேஜன், ப. அஜந்தன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## வன்னியில் எவ்வளவு மக்கள் உள்ளனர் என்று கூற முடியாது

### ஐ.சி. ஆர். சி. ஊடக அதிகாரி

வன்னியில் தற்போது எவ்வளவு மக்கள் இருக்கிறார்கள் என்பதை உறுதியாகக் கூற முடியாது.

என்றாலும் அரச கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து செல்லும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அம்மக்களுக்கு மிகவும் அவசியமானதாக மாறியுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்பு அலுவலக ஊடக அதிகாரி ஷொபி ரொமனன்ஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

வன்னி நிலப்பரப்பில் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பொதுமக்கள் இருந்ததாக முன்னர் கூறப்பட்டது.

ஆயினும் தொடர்ந்து மோதல் இடம் பெற்றுவருவதுடன் அதிகமான மக்கள் அங்கிருந்து அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு வந்துள்ளனர்.

இது தவிர ஒரு தொகை பொதுமக்கள் காயமடைந்தவர்களாக கடல் மார்க்கமாக அங்கிருந்து அழைத்து வரப்பட்டுள்ளனர்.

எனவே தற்போது முல்லைத்தீவில் எத்தனை பொதுமக்கள் இருக்கிறார்கள் என்பதை சரியாகக் கூறமுடியாது.

ஆயினும், தொடர்ந்து மோதல் இடம் பெற்று வரும் நிலப்பகுதி என்ற படியால் அரச கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து அனுப்பி வைக்கப்படும் அத்தியாவசிய பொருட்கள் அங்குள்ள மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்றார். (ஓ-6)

# சர்வதேசத்திடம் நிதியுதவி கோரும் அரசாங்கம்

# மனித உரிமை குறித்து பேசினால் கருத்திற் கொள்வதில்லை

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தத்துக்கு அமைய அரசியலமைப்புச் சபை யை உடனடியாக நிறுவி சுயாதீன ஆணைக் குழுக்களை அமைக்குமாறு அர சாங்கத்தை வலியுறுத்துகின்றோம். முக்கி யமாக உடனடியாகபொலிஸ் ஆணைக்குழுநிறுவப் பட வேண்டும் சட்டத்தின் ஆட்சிப் படுத்தலை உறுதிப் படுத்துமாறும் கோரிக்கை விடுகின்றோம்.

இதனை சர்வதேசமும் வலியுறுத்துகின்றது. என்று ஐக்கிய தேசிய கட்சியின் பாரா ளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன்கிரியெல்லதெரிவித்தார்.

சர்வதேசத்திடம் நிதியுதவிக்காக கையேந்தும் அரசாங்கம் மனித உரிமை மீறல் தொடர்பில் சர்வதேச சமூகம் பேசினால் அதனை கருத்திற் கொள்ளாது தட்டிக் கழிக்கின்றது. மனித உரிமை மீறல்கள் இடம் பெறும் நாடுகளில் முதன்மை இடத்துக்கு இலங்கையை தற்போதைய அரசாங்கம் கொண்டு சென்றுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றசெய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது,

நாட்டில் சட்டம் நடை முறையில் இருக்கின்றதா? என்று புரியாமல் உள்ளது. பொலிஸாரின் முன்பாகவே அசம்பாவி தங்கள் இடம் பெறுகின்றன. எனவே பொலிஸார் சுயாதீனமாக செயற்பட வேண்டுமானால் பொலிஸ் ஆணைக்குழு உடனடியாக அமைக்கப்பட வேண்டும் அதற்கு அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அரசியலமைப்பு சபை உருவாக்கப்பட வேண்டும்.

எனவே இது தொடர்பில்அரசாங்கம் உடனடியாக நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம். நாம் சர்வதேசம் முன்பாக தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். அரசியலமைப்பு சபையை நிறுவுமாறு சர்வதேச சமூகமும் வலியுறுத்துகின்றது.

நாட்டில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட அரசியலமைப்புச் சபை நிறுவப்பட வேண்டும் என்று கடந்த இரண்டரை வருடங்களாக வலியுறுத்தி வருகின்றோம். பாராளுமன்றத்துக்குள்ளும் பாராளுமன்றத்துக்கு வெளியிலும் இதனை ஐக்கிய தேசியக் கட்சியினர் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் நாங்கள் வலியுறுத்தும் போது அரசாங்கம் சிரிக்கின்றது. ஊடகங்கள் எழுதாமல் உள்ளன.

இலங்கையில் கடத்தல்கள், கொலைகள் மற்றும் கப்பம் பெறல் என்பன கலாசாரமாக மாறிவிட்டன. லசந்த விக்ரம துங்க கொலை செய்யப்பட்ட பின்னர் அது தொடர்பான தகவல்களை வெளியிடுவதாக பொலிஸார் தெரிவித்தனர். ஆனால் பின்னர் அந்த விடயம் மறக்கப்பட்டு விட்டது. (ஓ-6)

## மணல்திட்டில் தவித்த இலங்கை அகதிகள்

இலங்கை முல்லைத்தீவை சேர்ந்த சிவதர்சன் (20) யாழ்ப்பாணத்தை சேர்ந்த அஜந்தன் (21) ஆகிய இருவரும் கடந்த புதன்கிழமை அதிகாலை இலங்கை மன்னார் தாழ்வுபாடு கடற்கரையிலிருந்து மீன்பிடி படகில் புறப்பட்டு ராமேஸ்வரம் வந்தனர். வழியில் தனுஷ்கோடி கடல் பகுதி ஆறாவது மணல்திட்டில் இறக்கிவிட்டு இலங்கை மீனவர்கள் திரும்பிச் சென்றனர்.

மணல்திட்டில் தவித்த இருவரும் அங்கிருந்து ஒவ்வொரு மணல் திட்டுகளாக நீந்தி நேற்று காலை 11 மணிக்கு அரிச்சல் முனை கடற்கரை வந்தனர். தனுஷ் கோடி பொலீசார் விசாரித்து மண்டபம் முகாம் அனுப்பி வைத்தனர்.

# இலங்கைக்கு நிவாரணப் பொருட்களை

# அனுப்ப தமிழக அரசு முடிவு

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட 40 ஆயிரம் தமிழர் குடும்பங்களுக்கு ஏப்ரல் 15 ஆம் திகதிக்குள் உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நிவாரணப் பொருட்கள் அனுப்புவது தொடர்பாக தலைமைச் செயலாளர் கே. எஸ். ஸ்ரீபதி தலைமையில், அரசு அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்தில் நிவாரணப் பொருட்களை 40 ஆயிரம் சிப்பங்களாக அனுப்பி வைக்க முடிபு செய்யப்பட்டுள்ளது.

ஒரு சிப்பத்தில் புழுங்கல் அரிசி முதல் தரம் 15 கிலோ, துவரம் பரப்பு 2 கிலோ, சீனி 1 கிலோ, தேயிலை 100 கிராம், டம்ளர் 2, வேட்டி, புடவை, 2 போர்வைகள், சவர்க்காரம் 250 கிராம் ஆகியன உள்ளடக்கி இருக்கும்.

நிவாரணப் பொருட்களை பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு ஏப்ரல் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது.

முன்னதாக இலங்கைத் தமிழர்களுக்காக தமிழக அரசின் சார்பில் ரூ.50.53 கோடி நிவாரணமாகத் திரட்டப்பட்டது. அத்தொகையில் இருந்து இதுவரை ரூ.10.07 கோடிக்கான நிவாரணப் பொருட்கள், இந்திய அரசின் அனுமதியோடு இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தின் மூலம் அங்குள்ள செஞ்சிலுவைச் சங்கத்தின் பன்னாட்டுக் குழு மூலமாக தமிழ் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

தற்போது 40 ஆயிரம் குடும்பங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள், சமையல் பாத்திரங்கள் ஆகியவை அனுப்பப்பட வுள்ளன.

(ஓ-6)






கல்வி கலாசார விளையாட்டலுவல்கள் அமைச்சினால் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட நகைச்சுவை நாடகப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த மாதம் அரியாலை சனசமூக நிலய கலாசார மண்டபத்தில் நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட ஆ.தேவராஜா, நல்லூர் பிரதேச செயலர், நாடக ஆசிரியர் தருமராஜா, சமாதான நீதிவான் சி.சிவதாசன் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், விருந்தினர்களுடன் சான்றிதழ் பெற்றுக் கொண்ட மாணவர்கள் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# ரைடர் கன்னி இரட்டைச்சதம்; நியூசிலாந்து 619 ஓட்டங்கள் குவிப்பு

## இந்தியா ஆரம்பத்தில் தடுமாற்றம்

(நேபியர்)

ரைடரின் சிறப்பான இரட்டைச் சதத்தின் மூலம் நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களையிழந்து 619 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.


ரைடர்

லாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் நேற்றுமுன்தினம் நேபியரில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நேற்றுமுன்தினம் முதல்நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 351 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் இரண்டாம்நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி ரைடர் இரட்டைச் சதமும், மக்குலம் சதமும் அடித்து கை கொடுக்க அதன் முதலாவது இன்னிங்ஸில் 9விக்கெட்டுக்களையிழந்து 619 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.


இதில் தனது முதலாவது இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்த ரைடர் 328 பந்துகளில் (24 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட) 201 ஓட்டங்களையும் ரெய்லர் 151 ஓட்டங்களையும் மக்குலம் 115 ஓட்டங் களையும் அணித் தலைவர் விக்டோரி 55,பிராங்ளின் 52 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகீர்கான், இஷாந்த் சர்மா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங் 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களையிழந்து 79 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் அணித்தலைவர் சேவாக் 25 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 34 ஓட்டங்களையும் காம்பீர் 16 ஓட்டங்களையும் இஷாந்த் சர்மா ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்த துடன் டிராவிட் 21 ஓட்டங்களையும் டெண்டுல்கர் ஓட்டமெதனையும் ஆரம்பிக்காமலும் ஆட்டமிழக் காமல் களத்திலிருந்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் விக்டோரி 2 விக்கெட்டுகளையும் பட்டேல் ஒருவிக்கெட்டையும் வீழ்த்


மக்குலம்

தினர். மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.


நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி "இருபது-20" 5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் "இருபது-20" தொடரை நியூசிலாந்து அணி 2:0 என்ற கணக்கிலும் ஒருநாள் தொடரை இந்திய அணி 3:1 என்ற கணக்கிலும் கைப்பற்றின.

தொடர்ந்து நடைபெற்ற முத


(5)

# எண் விளையாட்டு-51



**போட்டிவிதிகள்:** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும்எண்களின் சவட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப் பட்டுள்ள எண்ணுக்கு சம மாகவர வேண்டும். இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான சவட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள் ளது. 1 முதல் 9 வரையான எண்களை பயன் படுத்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்திய எண் திரும்பவரக் கூடாது.

நேற்றைய பகுதிக்கான விடை



# ஐ.பி.எல். அட்டவணை வெளியீடு; 8 நகரங்களில் 59 போட்டிகள் நடக்கிறது

## இறுதிப் போட்டி மே 24 ஆம் திகதி

(மும்பை)

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) சார்பில் நடத்தப்படும் இரண்டாவது இருபது -20 தொடரின் முதல் போட்டி அடுத்த மாதம் 18ஆம் திகதி தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் நியூலாண்ட்ஸ் மைதானத்தில் நடக்கிறது.

இத் தொடரின் இறுதிப்போட்டி எதிர்வரும் மே 24ஆம் திகதி ஜோகனஸ்பேர்க்கில் உள்ள வாண்டரர்ஸ் மைதானத்தில் நடக்கிறது.

இந்தியன் கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) சார்பில் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் முதலாவது இருபது -20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். இரண்டாவது இருபது-20 தொடர் அடுத்த மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகுவதாக இருந்தது.

இந்தியாவில் நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் காரணமாக பல்வேறு பிரச்சினைகளை கடந்து இத் தொடர் தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டது.

இத் தொடர் தென்னாபிரிக்காவில் அடுத்த மாதம் 18ஆம் திகதி முதல் மே மாதம் 24ஆம்திகதி வரை நடத்தத் திட்டமிடப்பட்டது. இத் தொடருக்கான அட்டவணை வெளியிடப்பட்டது.

இதில் மொத்தம் 59 போட்டிகள் தென்னாபிரிக்காவின் 8 முக்கிய நகரங்களில் நடக்கிறது. இதில் கேப்டவுன், ஜோகனஸ்பேர்க், டர்பன், பிரிட்டோரியா, ஈஸ்ட் லண்டன், கிம்பெர்லி, புளோயம்போன்டைன் மற்றும் போர்ட் எலிசபெத் அடங்கும்.

இதில் டர்பனில் உள்ள கிங்ஸ் மீட் மைதானத்தில் அதிக பட்சமாக 16 போட்டிகளும் பிரிட்டோரியாவில் உள்ள செஞ்சூரியன் பார்க் மைதானத்தில் 12 போட்டிகளும் நடத்தப் படுகின்றது.

ஜோகனஸ்பேர்க்கில் உள்ள வாண்டரர்ஸ் மைதானம் மற்றும் கேப்டவுனிலுள்ள நியூலாண்ட்ஸ் மைதானத்தில் தலா 8 போட்டிகள் நடக்கவுள்ளன.

போர்ட் ஒப் எலிசபெத்தில் உள்ள செயின்ட் ஜோர்ஜ் பார்க் மைதானத்தில் 7 போட்டிகளும் ஈஸ்ட் லண்டனில் உள்ள பப்பலோ பார்க் மைதானத்தில் 4 போட்டிகளும் நடக்கவுள்ளன.

புளோயம் போன்டைனில் உள்ள அவுட்சூரன்ஸ் ஓவல் மைதானம் மற்றும் கிம்பெர்லியில் உள்ள டி பீர்ஸ் ஓவர் மைதானத்தில் தலா 2 போட்டிகளும் நடக்கவுள்ளன.

இப்போட்டிகள் இலங்கை நேரப்படி மாலை 4 மணி மற்றும் இரவு 8 மணிக்கு நடக்கிறது.

அடுத்த மாதம் 18ஆம் திகதி கேப்டவுனில் நடக்கவுள்ள முதல் போட்டியில்(மாலை 4 மணி) நடப்பு ஐ.பி.எல். சம்பியன் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியை சந்திக்கிறது.

அன்று இரவு 8 மணிக்கு நடக்கும் இரண்டாவது போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, மும்மை இந்தியன்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

லீக் சுற்றின் முடிவில் புள்ளிப் பட்டியலில் முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும் அணிகள் எதிர்வரும் மே 22, 23 ஆம் திகதிகளில் முறையே பிரிட்டோரியா மற்றும் ஜோகனஸ்பேர்க்கில் நடக்கும் அரையிறுதியில் மோதும்.

இதில் வெற்றி பெறும் அணிகள் எதிர்வரும் மே மாதம் 24ஆம் திகதி ஜோகனஸ்பேர்க்கில் நடக்கும் இறுதிப்போட்டியில் மோதும். (5)

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... (46)



இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 160 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 35 ஓட்டங்களைக் கொடுத்து காம்பில் (47), கூப்பர்(23) ஆகியோரை வெளியேற்றி 2 விக்கெட்டுக்களை பதம் பார்த்தார்.

தொடர்ந்து 50 ஓவர்களில் 161 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 45 ஓவர்களின் 6 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக் களால் வெற்றி பெற்றது. இந் நிலையில் தொடரின் நான்காவது போட்டி 1995 ஆம் ஆண்டு டிசம்பர் 21ஆம் திகதி சிட்னியில் நடை பெற்றது.

இப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியுடன் மோதியது இலங்கை அணி. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களை எடுத்தது. இதில் முரளிதரன் ஓட்டமெதனையும் எடுக்காமல் ஒரு பந்தை சந்தித்து ஆட்டமிழக்காமல் அரங்கு திரும்பினார்.

49 .4 ஓவர்களில் 5 விக் கெட்டுக்களை இழந்து 257 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்




தில் வெற்றி பெற்றது. இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 52 ஓட்டங்களைக் கொடுத்து விக்கெட் எதனையும் வீழ்த்தா மல் ஏமாற்றம் அளித்தார். பாலா

இப் போட்டியைத் தொடர் இலங்கை-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட்போட்டி 1995 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி மெல்போர்னில் ஆரம்ப மானது.

(பயணிக்கும்)

# டென்னிஸ் களத்தில் மீண்டும் கிளிஜ்ஸ்டர்ஸ்

முன்னாள் முதன்நிலை டென்னிஸ் வீராங்கனை கிம் கிளிஜஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ் போட்டிகளில் விளையாடத் திட்டமிட்டுள்ளார்.

25 வயதான கிளிஜஸ்டர்ஸ் கடந்த 2007ஆம் ஆண்டு டென்னிஸ் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார்.

இதனை தொடர்ந்து அவர் கண்காட்சி டென்னிஸ் போட்டிகளில் விளையாடி வருகின்றமை குறிப்பி டத்தக்கது.

பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த கிம் கிளிஜஸ்டர்ஸ் 2005ஆம் ஆண்டு அமெரிக்கஓபன் போட்டியில்சம்பியன் பட்டம் வென்றுள்ளதுடன் மூன்று கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் இறுதிப் போட்டிவரை முன்னேறியுள்ளார். அவர் இதுவரை 34 ஒற்றையர் பட்டங்களை வென்றுள்ளமை விசேட அம்சமாகும். (5)

# இலங்கைக்கு இராணுவ உதவிகளை இந்திய அரசு வழங்கவில்லை

## சுரேஷ் மேத்தா தெரிவிப்பு

(சென்னை)

இலங்கை இராணுவத்திற்கு இந்திய அரசு எந்த உதவியையும் செய்யவில்லை. ஆயுதம் வழங்குவதாகக் கூறுவது அடிப்படையற்ற குற்றச்சாட்டு என இந்திய கடற்படை அதிகாரி சுரேஷ் மேத்தா தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரம் உச்சிப்புளியில் நடந்த விழாவில் சுரேஷ் மேத்தா கலந்துகொண்டு 'ஐ.என்.எஸ். பருந்து' என்ற கப்பலை கடற்படைக்கு அர்ப்பணம் செய்தார்.

அப்பொழுது அவர் கூறுகையில் 'தென் கிழக்கு ஆசிய நாடுகளுடன் இந்தியா அதிகளவில் வணிக தொடர்பை கொண்டுள்ளது. இதனால் வங்கக் கடல் பகுதியில் பாதுகாப்பை அதிகரித்து வருகிறோம். இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்கு கடல் பாதுகாப்பு முக்கியமானது.

ஐ.என்.எஸ் பருந்து கிழக்கு கடலோர பகுதிகளை பாதுகாப்பதில் முக்கிய அங்கம் வகிக்கும். இலங்கை இராணுவத்திற்கு இந்திய அரசு உதவுவதாக சில தமிழக அரசியல் கட்சிகள் தெரிவித்து வருகின்றன. இதில் எந்த உண் மையுமில்லை.

இது அடிப்படையற்ற குற்றச்சாட்டு. இந்தியாவைப் பொறுத்தவரை விடுதலைப்புலிகள் தடைசெய்யப்பட்ட ஓர் அமைப்பு. அதற்கு எவரும் உதவ முடியாது. அதேசமயத்தில் இலங்கை இராணுவத்திற்கும் நாம் எந்த ஆயுதமும் வழங்கவில்லை' என்றார். (எ-5)

## சி.சு.க. அலுவல...

திற்குள் புகுந்து சரமாரியாகத் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தின்போது முரளிதரன் குழுவைச் சேர்ந்த இருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். இருவரது உடலங்களும் கல்முனை மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக சவளக்கடைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இச் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் தேடுதல் நடத்தப்பட்ட போதிலும் யாரும் கைது செய்யப்படவில்லை. (ச-5)

## முல்லைத்...

கொல்லப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சு, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படையினரிடம் வந்து சேர்ந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு களமுனையில் கடந்த 3 நாட்கள் நடைபெற்ற சமரில் 108 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் பெருமளவிலானோர் காயமடைந்துள்ளனர் என புலிகள் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன. (எ-5,14)

## கம்பஹாவில்...

6 மணிவரை நடத்தப்பட்ட இந்த சுற்றிவளைப்புத் தேடுதலின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

இந்த திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலின் போது 8 ஆயிரத்து 830 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் அவர் கூறினார்.

அத்துடன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பொதுமக்களில் தமது பதிவை உறுதிப்படுத்தத் தவறியவர்கள், பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள், போக்குவரத்து விதிமுறைகளை மீறியவர்கள் என 301 பேர் கைது செய்யப்பட்டனர். (ச)

## விடுதலைப்...

இதையடுத்து விடுதலைப் புலிகள் மீண்டும் விமானத் தாக்குதல் நடத்தக் கூடிய வாய்ப்பு இருப்பதாக இலங்கை இராணுவம் கருதுகிறது.

விடுதலைப் புலிகளின் அனைத்து விமான ஓடு தளங்களையும் கைப்பற்றிவிட்டதாக இலங்கை இராணுவம் தெரிவித்திருந்த நிலையில், கடந்த மாதம் புலிகள் 2 விமானங்கள் மூலம் கொழும்பு நகரில் தற்கொலை தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து விடுதலைப் புலிகளிடம் இனி விமானங்கள் எதுவும் இல்லை என்று இராணுவம் கூறியிருந்தது. தற்போது மேலும் ஒரு விமானம் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (எ-1)

## மனிதாபிமானப் போர்...

வேண்டும் என்று தான் அழுத்தம் கொடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். இதைச் சாத்தியமாக்கும் வகையிலும் பொதுமக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு வசதியாகவும் ஒரு வகையான மனிதாபிமான போர் நிறுத்தத்தை நாம் முன்மொழிந்துள்ளோம் என்றார் அவர். இது மிகவும் கவலையளிக்கும் ஒரு நிலைமை அதனால் பொதுமக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு வெளியேற அனுமதிக்க வேண்டும் என நாம் விடுதலைப் புலிகளிடம் முதலில் கோரிக்கை விடுக்கிறோம் என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.

### அமெரிக்கா குற்றச்சாட்டு

இலங்கையில் அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் மோதலினால் ஆயிரக்கணக் கான பொதுமக்கள் சிக்கியுள்ள யுத்த சூனிய வலயத்தின் மீது ஷெல் தாக்குதல் நடத்தப்படுவதை நிறுத்துவதாக வழங்கிய உறுதிமொழியை இலங்கை மீறியுள்ளதாக ஐக்கிய அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. எனினும் இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ள இலங்கை, யுத்த சூனிய வலயத்தின் மீது அதிபார ஆயுதங்களைக் கொண்டு இராணுவம் தாக்குதல் நடத்தவில்லை எனத் தெரிவித்துள்ளது.

வைத்தியசாலைகளையும் பொதுமக்களின் இருப்பிடங்களையும் அண்மித்து பெருமளவிலான மக்கள் தங்கியிருக்கும் பகுதிகள் மீது இலங்கை அரசு தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் நடத்துவது குறித்து மிகுந்த கவலை அடைவதாக ஐக்கிய நாடுகளுக்கான ஐக்கிய அமெரிக்காவின் பிரதித் தூதுவர் றோஸ்மேரி ரிகாலோ செய்தியாளர்களிடம் தெரிவித்ததாக ரொய்ட்டர் செய்தி கூறுகிறது. பொதுமக்கள் வாழும் பகுதிகளை அண்மித்த பகுதிகளில் ஷெல் தாக்குதலை நிறுத்துமாறு இலங்கை அரசை வலியுறுத்துவதாக இலங்கை நிலைவரம் குறித்து மூடியகதவுகளுக்குள் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை ஆராய்ந்த பின்னர் ரோஸ்மேரி ரிகாலோ இதனைத் தெரிவித்துள்ளார். தங்களுக்கு உறுதிமொழிகள் வழங்கப்பட்டதாகவும் எனினும் அதன் பெறுபேறுகளை அவதானிக்க வேண்டியுள்ளதாகவும் அவர் குறிபிட்டார்.

### ஐ.நா.செயலருடன் பிரி.பிரதமர் பேச்சு

இலங்கையில் தோன்றியுள்ள மனிதாபிமான நெருக்கடி குறித்து பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிறவுணும் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனும் பேச்சு நடத்தியுள்ளனர். ஐக்கிய நாடுகளின் தலைமைக் காரியாலயம் அமைந்துள்ள நியூயோர்க் நகரில் வைத்து பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிறவுண், பான்கீ மூனை சந்தித்துள்ளார். இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்களினால் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவிச் சிவிலியன்கள் குறித்து பான் கீ மூனும் பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிறவுணும் பேச்சு நடத்தியுள்ளனர். எனினும் பேச்சுவார்த்தையில் மேற்கொள்ளப்பட்ட முடிபுகள், எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (ச-3,5,14)

## மக்களை வெளியேற்றிவிட்டு...

ஜனாதிபதி மேலும் அங்கு கருத்து வெளியிடுகையில், வடக்கின் தற்போதைய சமூக நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பலமுறை அழைப்பு விடுத்தபோதும் பயங்கரவாதிகளின் அழுத்தம் காரணமாக அவர்கள் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவில்லை.

தமிழ் மக்கள் மீது உண்மையான அன்பு இருக்குமாயின் அவர்களின் நலன்புரி விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும் பேச்சுவார்த்தைகளில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சகல அரசியல் கட்சிகளும் கலந்து கொள்ளவேண்டியது முக்கியமானதாகும் என நான் கருதுகிறேன்.

தமிழ் மக்கள் மீது உண்மையான அன்பு இருக்குமாயின் தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழ் மக்களை விடுதலை செய்துவிட்டு பாதுகாப்புத் தரப்பினரை எதிர்கொள்ளுமாறு புலிகளுக்கு கூறுகிறேன் என்றார்.

இதேவேளை வடக்கு கிழக்குப் பிரச்சினை தொடர்பாக அரசியல் நிலைப்பாடுகள் எனத் தெரிவித்து, ஜனாதிபதியினால் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்றுக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும், அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக எந்த விடயமும் கலந்துரையாடப்படவில்லை என தமிழ்க் கட்சிகள் தெரிவிக்கின்றன.

அலரி மாளிகையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின்போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், அவரது சகோதரர் பஸில் ராஜபக்ஷவும் வன்னியில் தற்போதைய நிலைமை தொடர்பில் விளக்கமளித்தனர்.

வன்னியில் மக்கள் காயமடைவது குறித்தும், கொல்லப்படுவது குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டபோது ஆனந்த சங்கரிக்கும், ஈ.பி.டி.பியின் செயலர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணத்திற்கு யாழ்தேவி ரயிலை சேவையில் ஈடுபடுத்தவேண்டும் எனக் கூறப்பட்டபோது அதனை மதவாச்சியிலிருந்து வவுனியா வரையிலுமாவது செல்லவிடவேண்டுமென புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் கோரிக்கை விடுத்தார்.

எனினும் பாதுகாப்புத் தரப்புடன் இது தொடர்பாக கலந்தாலோசிக்கவுள்ளதாக ஜனாதிபதி இதன்போது பதிலளித்தார். யாழ்ப்பாண மாநகர சபைக்கு தேர்தல் நடத்த வேண்டும் என்ற கருத்துக்களும் அரசாங்கத் தரப்பில் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில் எவ்வித முடிவுகளும் இன்றி, அடுத்த திகதியிடலின்றி இந்தக் கலந்துரையாடல் நிறைவடைந்தது. இக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 61 பேர்...

வெடிகணை மற்றும் ஆர்.பி.ஜி. தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

வலைஞர்மட பகுதியை நோக்கி நேற்று நடத்திய தொலைதூர துப்பாக்கிச் சூட்டின் போது கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றை துப்பாக்கி ரவை துளைத்துச் சென்றதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதில் 20 வயதுடைய 8 மாத கர்ப்பிணிப் பெண்ணான சந்திரகுமார் கலைச்செல்வி என்பவரே படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவர் உயிரிழந்தார். இதேவேளையில் 27 வயதுடைய 6 மாத கர்ப்பிணிப் பெண்ணான ஜெகதீபன் சோதிமலர் என்பவரும் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளையில் 25 வயதுடைய 9 மாத கர்ப்பிணிப் பெண்ணான க.பாசமலர் என்பவரின் வயிற்றைத் துழைத்த ரவை, அவரின் சிசுவின் தலையைத் தாக்கியுள்ளது.

இதனால் வயிற்றில் இருந்த அந்த சிசு உயிரிழந்து விட்டது. தற்போது ஆபத்தான நிலையில் தாயார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் 3 கர்ப்பிணிப் பெண்கள் நிகழ்விடத்தில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் பெயர்களை உறுதிப்படுத்த அந்த இடத்தில் ஆட்கள் எவரும் இல்லை. அனைவரும் சிதறி ஓடி விட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய தாக்குதல்களில் 15 சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 40 சிறுவர்களும் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம் மாத்தளன் கப்பல் வீதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பணியாளரான 27 வயதுடைய பாலசிங்கம் சதீஸ்குமார் என்பவரும் நேற்றைய தாக்குதலில் படுகாயமடைந்தார்.

அத்துடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர் சிறீதரன் என்பவரின் மனைவியான 25 வயதுடைய கேதீஸ்வரி என்பவர் உயிரிழந்ததாக கூறப்பட்டது.

கொல்லப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு,

கருணாகரன் சாரதாதேவி (வயது 40), நீக்கிலாப்பிள்ளை லைனா ரட்ணராஜா (வயது 47), சரவணமுத்து கணபதிப்பிள்ளை (வயது 65), அந்தோனி அருளானந்தம் (வயது 64), ஜசிந்தா (வயது 19), சிறீகாந்தன் யதுர்சன் (வயது 13), இராசதுரை வசந்தகுமார் (வயது 36), வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம் (வயது 48), நடராசா ராகினி (வயது 40), சண்முகநாதன் இராசயோகம் (வயது 40),

சிறிதரன் ஜெகதீஸ்வரி (வயது 35), ஞானசீலன் கோகிலா (வயது 16), தங்கவேலு கிருஷ்ணமூர்த்தி (வயது 49), வசந்தகுமார் நந்தினி (வயது 33), கலைச்செல்வி (வயது 20), யோகராசா புஸ்பராணி (வயது 40), சந்திரசேகர் சசிக்குமார் (வயது 25), விஜயகுமார் தமிழினி (வயது 2), மகாலிங்கம் தேனஜா (வயது 32), சசிக்குமார் சுதாநந்தினி (வயது 35), சிவன்பன் ஜானகி (வயது 20), கணேஷ் சந்திரமோகன் (வயது 39), சிவகுமார் உதயமலர்(வயது 38), தர்மலிங்கம் பத்மாவதி (வயது 40), பஞ்சாட்சரம் (வயது 40), கிருசிகா (வயது 9), இராசதுரை வசந்தகுமார் (வயது 36), சிறிதரன் கேதீஸ்வரி (வயது 25), சிறிகாந்தன் யதுர்சன் (வயது 13),

யோகராசா புஸ்பராணி (வயது 40), மெய்யழகன் வசந்தினி (வயது 25), இராசதுரை ரஞ்சினி (வயது 23), சுதந்திரராசா இராசாத்தி (வயது 50), செல்வலிங்கநாதன் கிருசிகா (வயது 9), சுப்பிரமணியம் திருநாவுக்கரசு (வயது 8), வேலாயுதம் சுதர்சினி (வயது 11), வேலாயுதம் மகேஸ்வரி (வயது 48), பரமானந்தம் முத்துலிங்கம் (வயது 48), தர்மலிங்கம் பத்மாவதி (வயது 40), சிவகுமார் உதயமாஸ் (வயது 38), பஞ்சாட்சரம் (வயது 40),

வேலாயுதம் தாரணி (வயது 21), செல்வரட்ணம் தியானேசன் (வயது 43), கணேஷ் கமலேஸ்வரி (வயது 46), செல்லத்துரை யோகேஸ்வரன் (வயது 55), சந்திரகுமார் கலைச்செல்வி (8 மாதம்), சுப்பிரமணியம் சுஜீபா (வயது 11), சரவணமுத்து செல்லத்துரை (வயது 48), செல்வலிங்கம் (வயது 55), தங்கராசா யோகேஸ்வரி (வயது 39), சரண்யா (வயது 12), பாக்கியம் (வயது 45), சந்திரன் கௌரியம்மா (வயது 29), அருளானந்தம் அந்தோனி (வயது 75), நடராசா இராசகிளி (வயது 35), அப்பன் இராசயோகம் (வயது 40),

சிறிதரன் ஜெகதீஸ்வரி (வயது 30), கணேஷ் கிருபாகரன் (வயது 16), செல்வராசா மனோன்மணி (வயது 70), பெரியசாமி தமிழ்ச்செல்வி (வயது 13), கார்த்திகா (வயது 2) ஆகியோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்றைய எறிகணைத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் உள்ள மாவட்டபுரத்தில் இருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து கடைசியாக மாத்தளன் கிராமத்தில் அடைக்கலம் புகுந்த குடும்பமே எறிகணைத் தாக்குதலில் உயிரிழந்துள்ளது.

சிவகரன் சுவர்ணன் (வயது 12), சிவகரன் துளசி (வயது 10), சிவகரன் புவிதாயினி (வயது 4), மேற்படி மூன்று பிள்ளைகளின் தாயாரான சிவகரன் சியாமளா (வயது 34) ஆகியோரே ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர்.

மாத்தளன் மருத்துவமனைப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 6 மணியளவில் வீழ்ந்து வெடித்த எறிகணையில் இக் குடும்பம் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. இவர்களின் தந்தையான சிவகரன் படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் எனவும் கூறப்பட்டது. (எ-5)

ஆங்கிலம் கற்பித்தலில் இதுவரை காலமும் இருந்த சவாலை "ANVIL" தன் பத்து வருட ஆய்வின் மூலம் வெற்றிகரமாக எதிர்கொண்டிருக்கின்றது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்கு கொண்ட இந்த ஆய்வின் முடிவு ஆங்கிலம் கற்பிப்பதில் ஒரு திருப்பு முனையாகும்.
உங்கள் பிள்ளைக்கு ஆறு வயதாகின்றதா? ஆங்கிலம் கற்க அதுதான் சரியான நேரம். சரியான இடம்:-
ANVIL
The seat of formal English
ARASADY AMMAN VEETHY,
THIRUNELVELY NORTH.
சனி மற்றும் வேலை நாட்கனில் காலை பத்து மணிமுதல் அனுமதிகள் பெறலாம்.
(2450)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.